பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 16 திங்கட்கிழமை 29.04.2024 கதிர் 173

## இந்தியாவைச் சார்ந்தே நாம் முன்னேறவேண்டும்

### மனோ கணேசன் தெரிவிப்பு

இந்தியாவைச் சார்ந்துதான் நாம் முன்னேற வேண்டும் என்றுதமிழ்முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அட்டனில் மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சில நாட்களுக்கு முன்னதாக கொழும்பில் நடைபெற்றபொருளாதார கலந்துரையாடலின் போதுஒருவிடயத்தினைக் கூறினேன். எமது நாட்டுக்குகடன்வழங்குநர்கள் யாரும் வரமாட்டார்கள். நன்கொடைகளைவழங்குவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. கடன்களை வழங்குவதற்கு யாரும் முன்வரப்போவதில்லை.

கடன் வழங்கும் ஒரே நாடாக இருப்பது இந்தியாதான். அது எமது அயல்நாடு. அவ்வாறு அயல்நாடாக இருப்பது எமக்கு அனுகூலமான விடயம். அதுபொருளாதார ரீதியாக வேகமாக ☞2

## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை புகழ்ந்து பேசிய ஹர்ஷ டி சில்வா எம்.பி.

உலகில்வேகமாகவளர்ந்துவரும்பொருளாதாரத்தைக் கொண்டமாநிலம்தமிழ்நாடு. இந்தியாவில் கர்நாடகா, கேரளம், ஆந்திரா ஆகிய மாநிலங்களும் வேகமாக வளர்கின்றன. உலகில் வேறு எங்கும் இத்தகைய வளர்ச்சி இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வாதெரிவித்தார்.

அட்டனில் மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை முழுமையாக மறுசீரமைத்து பொருளாதாரமுறைமையை மாற்றியமைத்து முன்னேற்றமடையச்செய்யவேண்டும். பி.ரி.ஆர்.ஐ நீங்கள் அறிந்திருப்பீர்கள் தமிழ்நாட்டின் நிதி அமைச்சராக இருந்தவர். தற்போது தகவல் தொழில்நுட்ப அமைச்சராக உள்ளார்.

பி.ரி.ஆருடன் நான் வெள்ளிக்கிழமை மதிய உணவு அருந்தினேன். அவர் இலங்கைக்கு சில மணித்தியாலங்களே வருகை தந்திருந்தார். அவருடன் பேசும்போது பலதகவல்களைத் தெரிவித்திருந்தார்.

தமிழ்நாடு உலகிலேயே மிகவும் வேகமாக வளர்ந்துவரும் ஒரு மாநிலமாகும். அந்த மாநிலம் 2032ஆம் ஆண்டாகின்றபோது 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள்வருமானத்தினை எட்டவல்லதாக இருக்கும். கர்நாடகா, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்கள் அடுத்த பத்து முதல் 20 வருடங்களில் பெரும் வளர்ச்சியை எட்டவுள்ளன. உலகில் வேறெங்கும் இந்த வகையான வளர்ச்சி ஏற்படுவதற்குவாய்ப்பில்லை.

ஆகவே நாம் தற்போது ஆரம்பித்துள்ள கலந்துரையாடலை ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

திருகாணமலையில் நடந்த தந்தை செல்வாவின் நினைவு தினக் கூட்டத்தில் சுமந்திரன் ஆற்றிய உரையையும் அதனைக் கேட்காமலேயே சிறிதரன் எழுந்து சென்றுவிட்டதையும் குறிப்பிட்டிருந்தேன். அந்த உரையில் ஆங்காங்கே தந்தை செல்வாவை முன்னிறுத்திபலகுத்தல்கதைகளைப் போடவும்அவர்தவறியிருக்கவில்லை.

அவரது உரையின் இறுதிப் பகுதியிலும் அப்படி ஒரு குத்தல் கதையை அவர் கூறியிருந்தார். டட்லி - செல்வா ஒப்பந்தத்திலோ, பண்டா - செல்வா ஒப்பந்தத்திலோ சுயாட்சி என்கிற பதம் இல்லை என்று குறிப்பிட்ட அவர், இன்று அப்படி சுயாட்சிப் பதம் இல்லாமல் ஒரு ஒப்பந்தத்திற்கு இணங்கிவிட்டால் துரோகி என்று கூறிவிடுவார்கள் என்றும் தெரிவித்தார்.

2015 தொடங்கிய நல்லாட்சியில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அவரும் சம்பந்தரும் இணங்கிப் போனதை அடுத்தே கூட்டமைப்புக்குள்ளும் கட்சிக்குள்ளும் அவர்களுக்கு எதிரான கருத்துக்கள் ☞2

## நிதி அமைச்சின் செயலாளருக்கு சேவை நீடிப்பு

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக முன்னர் கடமையாற்றிய சிறிவர்தன, கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

சர்வதேசநாணய நிதிய பேச்சு சிறிவர்தன ஆற்றிய பெறுமதியான பங்களிப்புகள் மற்றும் தற்போது நடைபெற்று வரும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் ஆகியவையே இந்தநீடிப்புக்கான காரணமென ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# “இந்தியாவே எம்மை வாழவிடு” திருமலையில் நேற்று போராட்டம்

## பேரணியாகச் சென்றும் மக்கள் எதிர்ப்பு

திருகோணமலையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோண மலை முத்துநகர் கிராம மக்கள் நேற்றுஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

ஆளும் தரப்பே விவசாயிகளை வழவிடு, எங்களின் வாழிடத்தைப் பறிக்காதே, நாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடமே இதுதான், ஏழை களின் வயிற்றில் அடிக்காதே, ☞2

### மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு தராததன் மூலம்

## இன்றைய ஆளும் தரப்பு வடக்கு மக்களை கைவிட்டது

### தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

இன்றைய ஆளும் தரப்பு வடக்கு மீனவர்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிப்பதாக இல்லை, வடக்கு மக்களை அது கைவிட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ☞2

## இந்த வருடத்தின் இறுதி வாக்கில் வாகன இறக்குமதிக்கு அனுமதி

இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் முற்பகுதியிலிருந்து மீண்டும்வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கதிட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளும் கவனத்தில் கொள்ளப்படவுள்ளதோடு, நாட்டின் நிலைமைகளும் அவதானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். ☞2

## செப். 28 அல்லது ஒக். 5 ஜனாதிபதித் தேர்தல்

### அனுரகுமார ஆரூடம்

ஜனாதிபதி தேர்தல் செம்டெம்பர் 28இல் அல்லதுஒக்டோபர்5ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சுவீடனுக்குச் சென்றுள்ள அவர் ஸ்டொக்கொமில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றனார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் செப்டெம்பர் ☞2

## ஒற்றையாட்சியை நிராகரிக்காதவர்களே பொது வேட்பாளர் தேவை என்கின்றனர்

### கஜேந்திரன் எம்.பி. கடும் விமர்சனம்

தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தப்போவதாக கூறுபவர்கள் கடந்த 15 ஆண்டுகளிலே ஒற்றையாட்சியை நிராகரிப்பதாகக் கூறாதவர்கள். 13ஆவது திருத்தச்சட்டத்தினை வலியுறுத்திக்கொண்டு இருப்பவர்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்றஉறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன்தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற, ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவேண்டும் என்று கூறுபவர்கள் முதலில் நிலைப்பாட்டை அறிவித்துவிட்டு பின்னர் மக்களைத் தமக்குப் பின்னால் அணிதிரளுமாறுகோரவேண்டும்.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தப் போவதாக கூறுபவர்கள் கடந்த 15 ஆண்டுகளிலே ஒற்றையாட்சியை நிராகரிப்பதாகக் கூறாதவர்கள். 13ஆவதுதிருத்தச் சட்டத்தினை வலியுறுத்திக்கொண்டு இருப்பவர்கள்.

2018ஆம் ஆண்டு தை18ஆம்திகதி13ஆவது திருத்தச்சட்டத்தினை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளவர்கள். அப்படிப் ☞2

## இலங்கைக்கு உதவிகளை அள்ளி வழங்கும் நாடு சீனா

### மகிந்த, சமல் இருவரும் கூட்டாகப் புகழாரம்

சீனா எமக்கு தொடர்ச்சியாக உதவிகளை அள்ளிவழங்கும் நாடு என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது சகோதரர் சமல் ராஜபக்ச ஆகிய இருவரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டைமுல்கிரிவெல பகுதியில் நேற்று வறிய ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

வலுக்கத் தொடங்கின. அந்த அரசமைப்பு 'ஏக்கிய இராஜ்ஜிய' என்ற பெயரில் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டதாக இருந்ததை அடுத்து சம்பந்தரும் சுமந்திரனும் சமஷ்டியைக் கைவிட்டு ஒற்றையாட்சியின் கீழ் ஒரு தீர்வுக்கு இணங்கிவிட்டார்கள் என்று வசைபாடப்பட்டது.

தனது உரையில் அதனைக் குறிப்பிடத் தவறாத சுமந்திரன், தந்தைசெல்வாவின்வழியில்இன்று ஒருஒப்பந்தத்தை மேற்கொண்டால் அதைச் செய்பவரைத் தனது சொந்தக் கட்சியே துரோகி என்று முத்திரை குத்துகிறது என்று மறைமுகமாகச் சாடினார். தந்தை செல்வா எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தபோதும் சமாந்தரமாக பேச்சுக்களிலும் ஈடுபட்டார், சாத்தியமான ஒப்பந்தங்களைச்செய்துகொண்டார் அதுதான் அவரது அரசியல் அணுகுமுறையாக இருந்தது, தந்தையைப் பின்பற்றுகின்றோம் என்பவர்கள் அவற்றை மறந்துவிட்டு தந்தையின் ஒரு பக்கத்தை அல்லது ஒரு பகுதி அரசியலை மட்டும் முன்னிலைப்படுத்திச் செயற்படப்பார்க்கிறார்கள், அப்படிச் செய்வது தவறு என்றும் சுமந்தினர் அங்கு குறிப்பிட்டார்.

தந்தைசெல்வாவின்உரைகளில் இருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டிய சுமந்திரன் அரசியல் தீர்வைப் பெறுவதற்கு ஆள் எண்ணிக்கை குறையாமல் இருப்பதும் நிலப் பகுதியை பறிகொடுத்துவிடாமல் இருப்பதும் முக்கியமானது என்று தந்தை கூறியிருப்பதையும் அவரது வார்த்தைகளிலேயே வாசித்துக் காட்டினார். தற்போதைய நிலையை தந்தை செல்வா சொன்னதுடன் ஒப்பிட்ட அவர், இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுகொண்டிருப்பதைத் தடுக்கவில்லை என்றால் இன்னும் சில வருடங்களில் இலங்கையில் இனப் பிரச்சினை என்பது ஒரு தேசியப் பிரச்சினை என்கிற மதிப்பை இழந்துவிடும் என்றும் சுட்டிக்காட்டினார். இப்போதே, அந்த நிலையைஎட்டுவதற்கானவிளிம்பில் நின்றுகொண்டிருக்கின்றோம் என்பதையும் கூறிய அவர், இளைஞர்களைத் தக்க வைக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் அதற்கு அபிவிருத்தி முக்கியம் என்றார்.

உண்மையில் தந்தை செல்வாவைப் பயன்படுத்தி கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் சுமந்திரன் ஓங்கி உச்சந்தலையில் குட்டியிருக்கிறார். ஆனால், அதைப் புரிந்துகொள்ளும் திறனும் அறிவும் கட்சிக்குள் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. சுமந்திரன் சொல்கிற பிரச்சினைகள் உண்மையானவை, அவற்றுக்குத் தீர்வு காணவில்லை என்றால் இலங்கையில் தமிழ் இனம் தனது இருப்பை இழக்கும் என்பதும் திண்ணம். ஆனால், அதற்கான தீர்வுக்குசுமந்திரன்கருதும்வழிமுறைகளைச் செயற்படுத்துவதற்கான கட்சியா தமிழ் அரசுக் கட்சி என்பதுதான் இங்குள்ள பிரச்சினையே வண்டிலுக்கு ஏற்ற மாடு அல்லது மாட்டுக்கு ஏற்ற வண்டில் இருந்தால் மட்டுமே பயணம் சுமுகமாகவும் நீண்டதாகவும் அமையும். இல்லையேல் பயணம் பாரதூரமானதுதான். தமிழ் அரசுக் கட்சியும் சுமந்திரனும்பொருந்தாதவண்டிலும் மாடும் என்பது எனது கருத்து. வண்டிலை மாட்டுக்கு ஏற்படி கைபார்த்து விடலாம் என்று அவர் கருதினால், அது அவரது வாழ்க்கைப் பயணமாக மாறிவிடும் என்றுதான் நினைக்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியாவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாங்கள் வெளியேறவே மாட்டோம், இந்தியாவே எம்மை வாழவிடு என்று பெரும் குரலெழுப்பியதோடு பேரணியாகவும் சென்றனர்.

முத்துநகர் கிராம அபிவிருத்தி சங்கமுன்றலில் இருந்து தொடங்கிய இந்தப் போராட்டம் விவசாய நிலங்கள் வரையில் சென்றதோடு மீண்டும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் முன்றலுக்குத் திரும்பி நிறைவுக்கு வந்தது.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், "இந்தியநிறுவனத்துக்குஎமதுகாணிகளை விற்பனை செய்வதற்காக எமதுபூர்வீகஇருப்பிடங்களைவிட்டு வெளியேறுமாறு துறைமுக அதிகாரசபைஎமக்குநேரடியாகஅச்சுறுத்துகின்றது. நாம் எக்காரணத்திற்காகவும் எமது பூர்வீக நிலத்தினைவிட்டு வெளியேறப் போவதில்லை" என்றார்.

"1984ஆம் ஆண்டு குறித்த காணிகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரியவையாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அவற்றையே தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஷ்வரன் தெரிவித்தார்.

ஆனால், அந்த நிலம் தமது பூர்வீகக் காணிகள் என்றும் அங்கேயே தாம் பரம்பரைகளாக வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றார்கள்.

## இலங்கைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குடும்பங்களுக்குநிவாரணங்களை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ச, "சீனாவுக்கும் இலங்கைக்கும்இடையில்வரலாற்று ரீதியான தொடர்புகள் உள்ளன. பாஹியன் காலத்திலிருந்தே எமக்கிடையில் உறவுகள் காணப்படுகின்றன. எமக்கு சீனா பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது. விசேடமாகஇலங்கையின் அபிவிருத்திக்கு சீனா பெரும் உதவிகளை வழங்கியுள்ளது. தற்போதும் வழங்கி வருகின்றது" என்றார்.

சமல் ராஜபக்ச கருத்துத் தெரிவிக்கையில், "1950களில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. அப்போதுநாம்இறப்பரைக்கொடுத்து அரிசியைப் பெற்றுக்கொண்டோம். பின்னர் போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சீன அரசாங்கம் நாட்டில் பல்வேறு வேலை வாய்ப்புக்களை உருவாக்கியதுடன் நாட்டின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு பெருமளவான முதலீடுகளையும் செய்திருந்தனர்.

விசேடமாகதென்னிலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கு சீனா பெருமளவு நிதியை வழங்கியது. அந்தவகையில் அதன் தொடர்ச்சியான பங்களிப்பு தேவையாகவுள்ளது" என்றார்.

## இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் - ராஜபக்சவினர் நாட்டை விற்றுப்பிழைக்கின்றவர்களாக மாறியுள்ளார்கள். நாட்டில் எஞ்சியிருக்கம் வளங்களை விற்பனை செய்து தமது ஆட்சியை தக்க வைத்துக்கொள்வதற்கு அவர்கள் முனைகின்றார்கள்.

இலங்கை மின்சாரபையை துண்டுகளாக உடைத்து விற்பனை செய்வதற்கு சட்டமூலத்தினை தயார் செய்துள்ளார்கள். மறுபக்கத்தில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மை விற்பனை செய்யப்போகின்றார்கள்.

இந்த நாட்டின் மக்கள் அனைத்து வளங்களையும் இழந்துவிட்டு நாதியற்றவர்களாக இருக்கப்போகின்றார்கள். இதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

வடக்கு மாகாணத்தில் தீவுகளையும், கடல்வளங்களையும் சூறையாடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் கொள்ளைக்கார நிறுவனங்கள் என்று இந்தியர்களாலேயே தூற்றப்படுகின்ற நிறுவனமுதலாளிகள்முதலீடுகளைச் செய்வதற்கு ஆளும்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்அவர்களைப்பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக இல்லை. அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு அளிப்பதாக இல்லை. ஆகவே ஆளும் தரப்பு வடக்கு மக்களை கைவிட்டுள்ளது என்பதை மறந்துவிட வேண்டாம் என்றார்.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க முன்னதாகவே தெரிவித்திருந்தார்.

## செப். 28....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
17இற்கும், ஒக்டோபர் 17இற்கும் இடையில் தீர்மானம் மிக்க தேர்தலொன்று வரவுள்ளது. இந்த ஜனாதிபதி தேர்தலில் சிறந்ததொரு பெறுபேற்றினை எம்மால் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தால் உறுதியான எதிர்காலத்தினைநாட்டில்உருவாக்க முடியும்.

அத்தகைய பெறுபேற்றினைப் பெற்றுத்தருவதற்குநீங்கள்தயாராக உள்ளீர்கள் என்ற அடிப்படையில் உங்களுக்கு நானொரு வாக்குறுதியை அளிக்கின்றேன். எம் மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையில்துளியேனும்பாதிப்பு ஏற்படுவதற்குஇடமளிக்கமாட்டோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த மாற்றத்தினை உருவாக்க வேண்டும்.

பெரும்பாலும்ஜனாதிபதிதேர்தல் செம்டெம்பர் 28இல் அல்லது ஒக்டோபர் 5ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். நீங்கள் விமானச்சீட்டுக்களை முன்னரேயே பதிவு செய்வதற்காகவே இதனைக் கூறுகின்றேன். எம்முடைய நோக்கம் உங்களுடன் இணைந்து அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்வதாகும். அதன் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதாகும் - என்றார்.

## ஒற்றையாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டவர்கள் பொது வேட்பாளரை நிறுத்தி உலகத்துக்கு என்ன செய்தியைச் சொல்லப்போகின்றோம்.

ஆகவே இந்தியா மற்றும் மேற்குலகத்தின் எடுபிடிகளாக இருந்து, பொதுவேட்பாளரை நிறுத்திதென்னிலங்கையில்எமக்கு எதிரான ஒருவரை வெற்றிபெறச் செய்து எமது எதிர்காலத்தினை அழிக்கப்போகின்றோமா என்பதில் உறுதியானநிலைப்பாட்டைஎடுக்க வேண்டும் என்றார்.

## இந்தியாவைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னேறி வருகின்றது.

ஆசியாவில் இந்தியா வேகமாக முன்னேறுகிறது. அதேபோன்று தமிழ்நாடு முன்னேற்றமடைந்து வருகிறது. ஆகவே நாம் தமிழ்நாட்டையும், இந்தியாவையும் சார்ந்து செயற்படவேண்டும்.

அதனாலேயே தற்போதைய ஜனாதிபதியும் எங்களுடைய முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கதலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் பாலம் கட்டுவதற்கு முனைகிறார்.

அவ்வாறு பாலம் அமைப்பது என்பது அவருடைய கொள்கை மட்டுமல்ல எமது கொள்கையும் அதுதான். இந்தியாவையும், பாலத்தையும் காண்பித்து அனுமானைப்போன்று இந்தியா இங்கு வருகை தந்து எம்மை ஆக்கிரமிக்கப்போகின்றது என்பதெல்லாம் முட்டாள்களின் கதையாகும்.

முட்டாள்களை தூக்கி பாக்குநீரிணையில் போட்டுவிட்டு எமது கடமைகளை முன்னெடுக்க வேண்டும். இந்தியாவுடன் இணைந்து பொருளாதார ரீதியாக எமது நாட்டையும் முன்னேற்ற வேண்டும் என்றார்.

## தமிழ்நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாம் அடுத்த மாதம் தமிழ்நாட்டுக்குச் சென்று மேற்கொள்வோம். பெருமளவில் விரைவான வளர்ச்சியை அடையும் இந்தியாவுடன் எவ்வாறு இணைந்து கொள்வது என்று பார்ப்போம்.

இத்தகைய ஆய்வுகளைச் செய்யாதவர்கள் தற்போது இந்தியா எமதுநாட்டைக்கைப்பற்றியுள்ளதாக கூறுகின்றார்கள். இவர்கள்தான் நாம் அம்புலன்ஸ் சேவையைக் கொண்டுவந்தபோது இந்தியா நாட்டைகைப்பற்றப்போவதாகவும் பிரசாரம் செய்தவர்கள்.

இந்தியாவுடன் நாம் கொண்டிருக்கும் தொடர்புகளை எமது நாட்டின் எதிர்காலத்தினை வளமாக அமைத்துக்கொள்வதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# பசுமையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதனூடாக மாசற்ற சுதந்திரகாற்றை சுவாசிக்கும் வேலைத்திட்டம்





(தில்சாத் பர்வீஸ்)

'பசுமையான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதனூடாக மாசற்ற சுதந்திரக் காற்றை சுவாசிப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வரும் மரக்கன்றுகள் நடுகையிடும் வேலைத் திட்டம் 5 ஆவது முறையாக சிறிலங்கா மயில்ஸ் கட்டார் நிறுவனத்தின் முழு அனுசரணையுடன் அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தால் நடைபெற்று வருகின்றது.

இம்மரக்கன்று நடுகை சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் மஹ்சூம் செய்யத் அஹமட் தலைமையில் அண்மையில் ஏறாவூர் மட்ஃமமஃஅல் அஷ்ரப் வித்தியாலயம், மட்ஃமமஃமிச்நகர் இல்மா வித்தியாலயம், மட்ஃமமஃஅல் அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஏறாவூர் மஃஹதுன் நஜ்மில் உலூம் அரபிக் கல்லூரி போன்ற இடங்களில் இடம்பெற்றன.

இந் நிகழ்வுகளின் அதிதிகளாக சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் முஹம்மட் றிக்காஸ்,ஏறாவூர் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எல்.ஸாஜித் ஒஹஸைன் (பாகவி), இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் முஹம்மட் ரம்ஸி, மட்ஃமமஃஅல் அஷ்ரப் வித்தியாலய அதிபர் முஹம்மட் இஸ்ஸத், மட்ஃமமஃமிச்நகர் இல்மா வித்தியாலய அதிபர் முஹாஜிர் , மட்ஃமமஃஅல் அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் அல்ஹாஜ் எஸ்.எம்.எம்.நவாஸ் , மஃஹதுன் நஜ்மில் உலூம் அரபிக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்ஹ் எம்.பி.எம். இஸ்ஸத் (ஷர்கி) ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் நஜாத்,பொருளாளர் இம்தாத், உப பொருளாளர் அயாஸ், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான மசூத்,பாத்திமா ஸஹானா, நிகழ்ச்சி செயற்திட்ட பொறுப்பாளர் பாத்திமா தியானா ,இன்ஸமாம் மற்றும் பல நிருவாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(05)

# கண்டியில் வீடொன்றில் தீ பரவல்: உடைமைகள் முற்றாகச் சேதம்

## பாதிக்கப்பட்ட குடும்பம் நிர்க்கதியில்






கண்டி-உடப்பளாத்தபிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட வகுகவ்பிட்டியகிராமசேவகர்பிரிவில் உள்ள வீடொன்று மின் கசிவால் முற்றாக எரிந்து தீக்கிரையாகியுள்ளது. இதனால் அந்த வீட்டில் வசித்தவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கிராம சேவகருக்கும் கம்பளை உடப்பளாத்த பிரதேச செயலகத்துக்கும் புஸல்லாவை பொலிஸாருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினர் அறிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயால் பாதிக்கப்பட்ட குடும்பம் சுமார் 51 வருடங்கள் பரம்பரையாக அந்த வீட்டில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்நிலையில், இவர்களுக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொடுப்பதற்கு பல சமூக சேவையாளர்கள் முன்வந்துள்ளனர்.

தனியாக வீட்டை அமைப்பதற்கான சொந்த காணியை பெற்றுக்கொள்வதற்கு கிராமசேவர் ஊடாக உடப்பளாத்த பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீக்கிரையான வீட்டில் 3 பேர் வசித்து வந்துள்ளனர். அவர்களில் புஸல்லாவை சரஸ்வதி மத்திய கல்லூரியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயில்கின்ற மாணவியும் ஒருவராவார். அவரது கற்றல் உபகரணங்கள் உட்பட உடைகள் அனைத்தும் தீயில் முற்றாக எரிந்துள்ளன எனக் கூறப்படுகிறது.

தற்போது பாதிக்கப்பட்ட இக்குடும்பத்துக்கு பலர் உதவ முன்வந்துள்ளனர். அதேபோன்று இவர்களுக்கு உதவி செய்ய விரும்புபவர்களினது ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது.(05)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் முதலுதவிப் பயிற்சிகள்



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மானிப்பாய் இந்துக்கல்லூரி மானவர்களுக்கு முதலுதவி பயிற்சிப்பட்டறை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கல்லூரி பேஜ்மண்டபத்தில் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் 35 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்கள்.

(05)





காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அறிக்கையோடு நின்றுவிடக்கூடாது

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகவேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. குற்றவாழிகளை ஒழிப்பது பாவம் இல்லை என்று அமைச்சர் டிரான் அலஸ்; தெரிவித்த கருத்தைக் கண்டித்தே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கௌசல்யா நவரத்ன இது குறித்துத் தெரிவிக்கும்போது, மேற்கு மற்றும் தென் மாகாணங்களில் குற்றச் செயல்களை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள முதலாவு விசேட அதிரடிப்படையினரின் அணிவகுப்பு நிகழ்வில் உரையாற்றியபோது அமைச்சர் இவ்வாறான ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துத் தொடர்பாக சங்கத்தின் நிர்வாகத்தினர் கூடிப் பேசி கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர் என்று தெரிவித்தார்.

''கொலைகள், போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களை ஒழிப்பது பாவம் அல்ல'' என்று அந்த நிகழ்வில் உரையாற்றிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார். அவரது இந்தக் கூற்று சட்டத்துக்குப்புறம்பானகாவல்துறையின்கொலைகளை நியாயப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. ஓர் அமைச்சரே இதனைக் கூறும்போது அதுவே ஆளும் தரப்புக் கொள்கையாகவும் பார்க்கப்படக்கூடியது. அத்தகைய ஒரு கொள்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் மட்டுமல்ல எந்தவொ–ரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததே.

இப்போதுமட்டுமல்லபோரின்போதும்தமிழ்மக்களுக்கு எதிராகப் படையினர் மற்றும் காவல்துறையினரிடம் இவ்வாறான சட்டத்தை மீறிய படுகொலைகள், கடத்தல்கள் கொள்கை ரீதியால் ஆளும் தரப்புக்களால் ஊக்குவிக்கப்பட்டன. அதன் விளைவாகவே இறுதிப் போரில் ஓர் இனச்சுத்திகரிப்பு இடம்பெறும் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது. சரணடைந்தவர்களைக் கொன்றது, போர்க் கைதிகளைக் காணாமலாக்கியது என்று பல கொடூரங்கள் அன்று அரங்கேற்றப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். அப்போது சிங்கள தேசம் இந்தக் குற்றங்களைக் கண்டுகொள்ளவேயில்லை. அதன் விளைவாகத்தான் இன்று குற்றவாளிகளுக்கு எதிரான நடவழக்கை என்கிற பெயரில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதற்கும் சட்டத்தை மீறிய கொலைகளைச் செய்வதற்கும் அமைச்சருக்குத் துணிபு ஏற்படுகின்றது.

அமைச்சர்டிரான்உடனடியாகப்பதவிவிலகவேண்டும் அல்லதுஅரசுத்தலைவர்ரணில்விக்கிரமசிங்கஅவரைப் பதவி விலக்கவேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. அப்படி நடக்கவில்லையாயின் உள்ளூரிலும் உலக அளவிலும் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டி வரும் என்றும் கௌசல்ய நவரத்ன எச்சரித்துள்ளார். கடந்த மாதங்களில் இலங்கை காவல்துறை பல்வேறு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சட்டத்தரணிகள் சங்கம் வெறும் எச்சரிக்கையோடு அல்லதுதீர்மானத்தோடுநின்றுவிடாமல்உண்மையாகவே அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் இலங்கை எதிர்காலத்திலாவது மக்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பான நாடாக இருப்பதை உறுதிப்படுத்த முடியும். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்பதுதான் காவல்துறையினரின் கடமையே அன்றி சட்டத்தை மீறிய கொலைகளில் ஈடுபடுவதல்ல என்பது காவல்துறையினருக்கும் உறைக்கும்.

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரா அல்லது நாடாளுமன்ற தேர்தலில் தமிழரின் பொது அணியா?

# தடுமாற்றம் ஏன்?

**Dr. முரளி வல்லிபுரநாதன்**

இந்திய நலன்களை முன்னிறுத்திச் செயல்படும் சிவசேனை மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் ஏனைய இந்திய முகவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட 'எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது





வேட்பாளர்' என்ற கோரிக்கை இப்போது பல தளங்களிலும் தீவிரமாக விவா திக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில்'தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்துவதால் தமிழினத்துக்கு நன்மை விளையுமா?', இந்த அரசியல் சதுரங்கத்தில் தமிழர் தரப்பு தம்மை வலுப்படுத்துவதற்கு எவ்வாறு காய் நகர்த்த வேண்டும்?' என்பது ஆராயப்படவேண்டியது அவசியம்.

முதலில் கடந்த காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடும்போது என்ன நடந்தவற்றைப் பார்க்கலாம்.

### வரலாறு

இலங்கையின் அரசமைப்பு 1978ஆம் ஆண்டு மாற்றப்பட்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் 1982ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் 'தமிழர் தேசம் ஒரு தனி தேசம்' என்ற கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரான அமிர்தலிங்கத்திடம் இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினாவியபோது ''கூட்டணி இது போன்ற மலிவான உத்திகளை பயன்படுத்தாது'' என்றும் அதேநேரம் ''ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும்' என்றும் கோரி இருந்தார். அப்போது இடதுசாரி தமிழ் கட்சிகளால் ''ஜேஆர்க்கு எதிரான தமிழ் வாக்குகளை திசை திருப்புவதற்காக குமார் போட்டியிடுகிறார்'' என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு இருந்தது. இறுதியாக குமார் 173,934 வாக்குகளை அதாவது மொத்த வாக்குகளில் (2.67%) வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் 40.03% (87,263) வாக்குகளைப் பெற்று முன்னிலையில் இருந்தார்.

இரண்டாவதாக, சிவாஜிலிங்கம் ரெலோ மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகிய பின்னர், 2019 நடைபெற்ற 8ஆவது ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு 0.09 வீத (12256) வாக்குகளைப் பெற்றார்.

மேற்படி இரண்டு தேர்தல் முடிவுகளையும் எடுத்து நோக்கினால் 1977 இனக்கலவரத்தின் பின்னர் தமிழர் மத்தியில் விடுதலை உணர்வுகள் உச்சத்தில் இருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற இலங்கையின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் -கூட்டணியின் பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்கு மத்தியிலும்- யாழ் மாவட்ட மக்கள் குமாருக்கு வாக்களித்துத் தனித்தேசம் குறித்த தமது விருப்பினை வெளிப்படுத்தியிருந்தனர். இருப்பினும் முக்கியமாக வடக்கு கிழக்கிற்கு வெளியே தமிழர்களின் ஆதரவை அவரால் பெற முடியவில்லை.

ஆனால் 2019 இல் இடம்பெற்ற எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளராகத் தம்மை முன்னிறுத்தி சிவாஜிலிங்கம் போட்டியிட்டபோது அவர் முற்றாக அனைத்துப் பிரதேசத் தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்ட அதேவேளையில், ராஜபக்சக்களுக்கு எதிரான தமிழர்களின் வெறுப்பு அலையானது வடக்கு கிழக்கு மலையகம் எங்கும் சஜித் பிரேமதாசவுக்கான ஆதரவாக வெளிப்பட்டு, அந்தப் பிரதேசங்களில் மாத்திரம் சஜித் வெற்றி பெற்று இருந்தார்.

குறித்த காலகட்டத்தில் ''திருநெல்வேலியில் உள்ள பிரபல உல்லாச விடுதியில் ராஜபக்சக்களும் சிவாஜிலிங்கமும் இரகசியமாகச் சந்தித்த பின்னரே சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார்'' எனச் சந்தேகங்கள் எழுந்திருந்தன. அவற்றினை உறுதிப்படுத்துவது போல, ராஜபக்சக்களுக்கு ஆதரவான சிங்கள மொழி ஊடகங்கள் சிவாஜிலிங்கத்தின் தமிழ் இனவாத நேர்காணல்களை மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டு சிங்கள வாக்காளர் மத்தியில் சிங்கள இனவாதத்தைத் தூண்டி ராஜபக்சக்களின் வெற்றியை உறுதி செய்து இருந்தன.

### தமிழ்ப் பொது வேட்பாளர்

2019 இடம்பெற்ற எட்டாவது ஜனாதிபதித் தேர்தலிலேயே 'தமிழர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு எதையும் சாதிக்க முடியாது' என்பதைத் தமிழ் வாக்காளர்கள் உணர்ந்துவிட்ட நிலையில், இப்போது தமிழர்களுக்குத் தனியான தேசத்தைப் பெறுவதற்குரிய சாத்தியங்கள் மேலும் அருகியுள்ள நிலையில், இந்திய முகவர்கள் ஏன் தமிழ்ப் பொது வேட்பாளர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்? என்பதை அறிந்துகொள்ளத் தொடர்ச்சியாக இலங்கையில் இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் தந்திரங்கள் என்ன என்பதைத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் தமிழ் வாக்குகள் பிரிக்கப்படும். அப்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளுடன் பதவிக்கு வரும் நிலையில் கொழும்பில் உள்ள ஆட்சியாளர்களுக்கும் தமிழருக்கும் உள்ள இடைவெளி அதிகரிக்கும்.

அதாவது சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள இடைவெளியை பயன்படுத்திக்கொண்டு இலங்கைக்குள் பின்கதவால் உள்நுழைவதே இந்திரா காந்தி காலத்தில் இருந்து இந்திய வல்லரசு, அந்த நாட்டின் உளவு அமைப்பு மற்றும் தற்போதைய மோடி அரசு வரையில் பிரதான தந்திரோபாயத் திட்டமாக இருக்கிறது.

இலங்கையில் தமிழ்த் தலைமைகள் ஒன்றுபடுவதை தடுத்து அவர்களைப் பலவீனமான பொம்மலாட்டப் பொம்மைகளாக வைத்திருப்பதன் மூலம் ஈழத்தமிழரின் தேசிய உணர்வுகளை மழுங்கடித்து இந்தியசார்புநிலையைத் தோற்றுவிப்பது இரண்டாவது திட்டமாக இருக்கிறது. இந்த உபாயத்தைப் பல ஈழப் போராளி இயக்கங்களை இந்தி(ரா)யா தனது மண்ணில் உருவாக்கிப் பயிற்சியளித்து மோதவிட்ட காலத்தில் இருந்து இன்றைய தமிழ் அரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தலில் இந்திய முகவர்கள து தலையீடு வரை இதனைத் தொடர்ச்சியாக அவதானிக்கலாம்.

இலங்கையில்தமிழருக்கு 13ஆவதுதிருத்தத்துக்கு மேற்பட்ட ஒரு கௌரவமான தீர்வோ அல்லது நிலையான சமாதானமோ ஏற்படக்கூடாது என்பதே இந்தியப் பிராந்திய வல்லரசின் மூன்றாவது திட்டமாக இருக்கிறது. இதன் காரணமாகவே 2009ஆம்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரா அல்லது.....

4ம் பக்க தொடர்ச்சி...........

ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 'சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கவேண்டும்' என்று வலியுறுத்தி இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை மேலை நாடுகள் கொண்டு வந்தபோது, இந்தியா தலையிட்டு அதனை இலங்கையில் தமிழ் மக்களைப் 'பயங்கரவாதிகளிடமிருந்து' விடுவித்தமைக்குப் பாராட்டும் தீர்மானமாக மாற்றியது. இந்தியாவின் இந்தச் சூழ்ச்சியினால் வன்னியில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் இரண்டு வருடங்கள் தமிழர்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்படும் நிலை உருவானது .

மேலே குறிப்பிட்ட உபாயங்களை இலங்கையில் மாத்திரமல்லாமல் இந்தியா தனது அண்டை நாடுகளான வங்கதேசம் (பங்களாதேஷ்), பாகிஸ்தான் மற்றும் மாலைத்தீவுகள் அனைவற்றிலும் கடைபிடித்துப் பிராந்தியத்தில் தன்னை ஒரு வல்லரசாக நிலைநாட்ட முயல்வதைக் காணலாம். பிராந்தியமானது பிரித்தானியாவில் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னரான காலப்பகுதியின் வரலாற்றை ஆராய்வதன் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம்.

எனவே தமிழ் மக்களும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நேர்மையாகப் போராடுபவர்களும் இந்தியாவின் இந்த நயவஞ்சக வலைக்குள் வீழ்ந்து விடாது, தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கான எந்த ஒரு நகர்வினையும் முற்றாக நிராகரிக்க வேண்டும்.

### எது சாத்தியம்?

இலங்கையில் தலைவிரித்தாடும் ஊழல் மற்றும் மோசடிகள் நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர்களையும் பாதித்துக் கொண்டிருக்கும் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்டுள்ள நிலையில், தமிழர்களே அதிகளவு வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ள தருணத்தில், ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில் ஈழத்தமிழர்கள் தமது வாக்குகளைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி இந்த அரசியல் சதுரங்கத்தில் பொது எதிரிகளை முதலில் தோற்கடிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் தற்போதைய அரசியல் கள நிலவரத்தின்படி, முதன்மைக் கட்சிகளும் முதன்மை வேட்பாளர்களும் சமபலத்துடன் காணப்படுகின்றனர். ஒரு தென்பகுதிக் கட்சியோ தலைவரோ அறுதிப் பெரும்பான்மையின வாக்குகளை மட்டும் பெற்று வெற்றி அடைய முடியாத சூழல். இம்முறை எவர் ஜனாதிபதியாக வருவார் என்பது சிறுபான்மையினர் கைகளிலேயே உள்ளது எனப் பெரும்பான்மையின மக்களே வெளிப்படையாகக் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழர்கள் மாறக்கூடிய தந்திரோபாயத் தருணத்தில், தென்பகுதியில் இளைஞர்களின் ஆதரவுடன் சுயமாக உறுதியாக முடிவு எடுக்கக்கூடிய தலைவராக முன்னிலை பெறும் ஒருவருக்கு வாக்களிப்பதன் ஊடாக ஒரு ஆட்சி மாற்றத்தை தமிழர்களால் ஏற்படுத்த முடியும்.

ராஜபக்சக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்ற நிலையில், இம்முறையும் ராஜபக்சக்களின் ஆதரவுடன் போட்டியிடும் தென்பகுதி ஜனாதிபதி வேட்பாளர் மறைமுகமாகத் தமிழ்ப் பொது வேட்பாளரை ஊக்குவித்துத் தென்பகுதியில் சிங்கள இனவாத வாக்குகளைப் பெறவே எத்தனிப்பார். அதேபோல, பிராந்திய வல்லாதிக்கமும் இலங்கையில் தமிழர்கள் தீர்மானகரமான சக்தியாக மேலெழுவதைத் தடுக்கத் தன்னாலான அனைத்தையும் செய்யும்.

### தமிழர் பொது அணி

அடுத்ததாக நாடாளுமன்றத் தேர்தலில், விகிதாசார முறைத் தேர்வு முறைமையின் கீழ் அதிக அளவு தமிழர்கள் நாடாளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், அனைவரும் இணைந்து தமிழர்களின் பொது அணி ஒன்றை உருவாக்கி அந்த அணியின் கீழ் போட்டியிட வேண்டும்.

ஜேவிபியோ அல்லது சஜித் அணியினரோ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழர்களின் உரிமைகளைத் தாம்பாளத்தில் வைத்துத் தரப்போவதில்லை. மாறாக சிங்களத்தின் வாக்குகள் முக்கூறாகப் பிரியக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படும் களநிலவரத்தில், சரியான தந்திரோபாயத் திட்டமிடல் ஊடாக இலங்கையின் அடுத்த நாடாளுமன்றில் தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செல்வாக்கினை அதிகரிக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பம் தற்போது கைகூடியுள்ளது. சின்னாபின்னப்பட்டுச் சிதறி நிற்கும் ஒட்டுக்குழுக்களாகச் செயல்படாத தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஈழத்தமிழரின் நலன்களுக்காகத் தமது சுயநலன்களை தியாகம் செய்து ஒன்றுபட்டால் கூட்டாட்சித் தீர்வினை அல்லது குறைந்த பட்சம் 13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி போலீஸ் அதிகாரங்களை வேண்டிப் பெற முடியும்.

மேலும் பொதுவான தமிழர் அணி ஒன்றை உருவாக்க ஆதரவளிக்காத அரசியல்வாதிகள், ஜனாதிபதித் தேர்தல் வரும்போது மட்டும் குதித்தெழுந்து பொது வேட்பாளர் பற்றி பேசும் போது, அவர்களுடைய வேடம் கலைந்து யாருடைய நலன்களுக்காக இந்தக் கோரிக்கையை முன் வைக்கிறார்கள் என்பது பரகசியமாகிறது.

மோடியின் ஆளும் தரப்பு நாள்தோறும் இலங்கைக் கடலில் பல மில்லியன் பெறுமதியான மீன்களை இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக அள்ளிச்செல்ல ஊக்குவித்து வருவதோடு, சுரண்டலை மேலும் அதிகரிப்பதற்கு மண்டைதீவில் பல மில்லியன் பெறுமதியான கடல்வள ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க முன்வருகிறது. மறுபுறம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைத்து இலங்கையின் வளங்களை உறிஞ்சி எடுப்பதற்கு கங்கணம் கட்டிச் செயல்படுகிறது .

மோடியின் நெருங்கிய சகாவும் வியாபாரியுமான அதானி மன்னார் உட்பட வடக்கின் பல பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையில் காற்றாலைகளை அமைத்து, இயற்கைச் சமநிலையினைக் குலைத்துத் தமிழர்களை அவர்களது வரலாற்று வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றி, அப்பகுதிகளில் நிறைவாக உள்ள இல்மனைட் உள்ளிட்ட கனிய வளங்களையும் சுரண்டுவதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றார். அதே தருணத்தில், இலங்கைத் துறைமுகங்களைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முயலும் இந்தியா இப்போது மத்தள விமான நிலையத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### செய்ய வேண்டியது என்ன?

இவ்வாறாக இந்தியாவின் சூழ்ச்சிவலை இலங்கையை சுற்றி இறுகிக் கொண்டு வரும் களப்புறச் சூழ்நிலையில் ஈழத் தமிழர்கள் 'மத்தியில் ஆட்சி மாற்றம், மாகாணங்களில் தமிழர் பொது அணி' என்ற திட்டத்துடன் காய்களை நகர்த்தித் தம்மை பலப்படுத்த வேண்டும்.

இந்தியாவின் கைக்கூலிகளாகப் பல தமிழ் அரசியல்வாதிகள் மாற்றப்பட்டு மௌனமாக்கப்பட்டும், பிரதான அரசியற் கட்சி உட்கட்சிப் பிளவினால் செயலிழக்க வைக்கப்பட்டும் உள்ள கையறு நிலையில் இன மீட்சிக்காகத் தமிழ் புத்திஜீவிகளும் தேசிய சிந்தனையாளர்களும் தமது கருத்துக்களை துணிவுடன் வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

போர்க்கால அழிவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் வறுமைக் கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்ட பெருமளவு தமிழர்கள் வன்னி, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மலையகம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வருகிறார்கள்.அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றும் இலங்கை நீதிமன்றத்தில் பொருளாதாரக் குற்றம் இழைத்தவர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் ஆகிய இரு தரப்பினர் மீதும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

முழுமையான ஒரு ஆட்சி மாற்றத்தின் மூலமே இந்தக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதே வேளை நாடாளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரித்து ஒன்றுபட்ட குரலில் பிராந்திய சுயாட்சியைப் பெற ஈழத் தமிழர்கள் முயல வேண்டும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மூதூர் – மேன்காமம் குளத்தின் கரையோரங்கள் ஆக்கிரமிப்பு

## உண்மையறியும் நோக்கில் சாணக்கியன் களப் பயணம்



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மேன்காமம் குளத்தின்பகுதிகளைநாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

அண்மைக் காலமாக இக்குளத்தின் பகுதிகளை சிலர் ஆக்கிரமித்து வருகின்றனர் எனவும், கனரக வாகனங்களைப் பயன்படுத்தி குளத்தின்பகுதிகளைச்சேதப்படுத்தி, அங்கிருக்கும் நீரை வெளியேற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்எனவும்சாணக்கியனிடம் கேட்டறிந்தார்.

மேன்காமம் குளமானது நீண்ட காலமாக காலத்துக்கு காலம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, குளத்தின்பெரும்பகுதிகள் சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்ட காரணத்தால்மேன்காமம்குளத்தை நம்பி மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாயம், நன்னீர் மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்றவை பாதிக்கப்பட்டுள்ளன.

குளம் ஆக்கிரமிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள அப்பிரதேச மக்கள் பலரது வாழ்வாதாரம்



அந்தக் கிராம மக்கள் முறையிட்டுள்ளனர்.

அதையடுத்து, அப்பகுதிக்கு சனிக்கிழமை நேரடி விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அங்கே கள நிலவரம் குறித்து அவதானித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக மத்திய நீர்பாசன திணைக்கள பணிப்பாளருடன்தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கை தொடர்பாகவும் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் அப்பகுதியில் எதிர்காலத்தில் குளம் இல்லாத சூழல் ஏற்படலாம் எனவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குளத்தைஎல்லைப்படுத்திகுளத்தை தூர்வார்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு குளத்தை ஆக்கிரமிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து, குளத்தை பாதுகாக்க உதவுமாறும் அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(05)

# பிக்குனியாகப் போவதாகக் கடிதம் எழுதிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறிய 14 வயதுச் சிறுமி

பிக்குனியாகத் துறவரத்தில் ஈடுபடப் போவதாகக் கடிதம்எழுதிவைத்துவிட்டுவீட்டைவிட்டுவெளியேறிய சிறுமி தொடர்பில் பொலிஸில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை , பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியே இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இவர் கடந்த 25 ஆம் திகதி அன்று தனது குடும்பத்தினரிடம் தெரிவிக்காமல் கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனச் சிறுமியின் தாயார் பேருவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கற்பிட்டியில் 37 கிலோ தங்கம் கொள்ளை சம்பவம் தொடர்பில் தேடப்படும் ஐவர்




*(எம்.எச்.எம் சியாஜ்)*

*கற்பிட்டியில் 37 கிலோ தங்கம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வரும் சந்தேகநபர்கள் ஐவரை கைது செய்ய இலங்கை பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.*

*கடந்த வருடம் நவம்பர் மாதம் கற்பிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவரைக் கடத்தி 37 கிலோ தங்கத்தை திருடிய சந்தேகநபர்கள் தேடப்பட்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*கற்பிட்டி சுற்றுவட்ட நீதவான்நீதிமன்றத்தால் பெயரிடப்பட்டுள்ள சந்தேகநபர்கள் 5 பேரும் தமது வீடுகளை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகிறது.*

*சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை 071 8591763 அல்லது 071 8594916 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.*

*(05)*

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# அம்பியெனும் தமிழ்த்தும்பி அவ்வுலகம் சென்றது !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**



குழந்தை இலக்கியம் என்பது ஆணிவேரை ஒத்ததாகும்.எழுதுவதற்கு மிகவும் சிரமாமன இலக்கியம் எது என்றால் அது' குழந்தை இலக்கியமே ' குழந்தைகளின் உளவியலைப் புரிந்து கொண்டால்த்தான் அது சாத்தியமாகும்.குழந்தைகளின் இலக்கியம் இலக்கிய வகைகளிலே மிகவும் முக்கியமானதாகும். சிறிய வயதிலே படிக்கும் பழக்கம் இருந்தால்த்தான் பெரியவர்கள் ஆன பின்பும் படிப்பார்கள். பெரியவர்களின் இலக்கியத்துக்குக் கூட அடித்தளம் 'குழந்தை இலக்கியம் ' என்பதுதான் மனமிருத்த வேண்டிய உண்மை யெனலாம். அவுஸ்திரேலியாவில் குழந்தை இலக்கியத்தை வளர்ப்பதில் குறிப்பிட்ட படைப்பாளர்களே ஈடுபடுகிறார்கள்.குழந்தைகளுக்கான படைப்புக்களை படைப்பதை ஒரு முக்கிய பணியாக நினைத்தே அவர்கள் தங்களது படைப்புக்களை படைக்கின்றார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

அவுஸ்திரேலியாவில் குழந்தை இலக்கியம் பற்றி எழுதவோ அல்லது பேசவோ தொடங்குவதாய் இருந் தால் அம்பி என்னும் அம்பிகைபாகரை உச்சரிக்காமல் தொடங்கவே இயலாது. அந்த அளவுக்கு அவுஸ் திரேலிய குழந்தை இலக்கியத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தினை அவர் ஏற்படுத்தி வைத் து ள் ளார்.அம்பி தாய்மொழிப் பற்று மிக்கவர்.சமூக அக்கறை கொண்டவர்.அடுத்த தலை முறையினரான குழந்தைகளை மனமிருத்தினார். அதனால் அவரின் குழந்தைகள் பற்றிய சிந்தனை சிறப்பினைப் பெற்றது எனலாம்.

ஆரம்பத்தில் சிறுகதை எழுதியவர் பின்னர் கவிஞராகவே மலர்ந்தார். கவிஞராகவே இருக்கவே ஆசை யும் கொண்டார். தமிழ்நாட்டில் குழந்தை இலக்கியம் என்றதும் எல்லோர் நினைவிலும்வந்துநிற்பவர்கவிமணிஅவர்களே. அம்பியையும் ஈழத்துக் கவிமணி என்றுதான் அழைக்கின்றனர். அந்த அளவுக்கு குழந்தைகளிடம் பற்றும் பாசமும் கொண்டு அவர்களுக்காக கவிதை இலக்கியத்தை வளர் த்து நின்றார். கணித ஆசிரியராய் இருந்தவரின் எண்ணத்தில் குழந்தைகள் இலக்கியம் கருக்கொண்டது என்றால் அந்த அளவுக்கு அம்பியின் ஈடுபாடு குழந்தைகள் பால் மிக்கிருந்தது என்றுதான் கருத முடிகிறது.

குழந்தைகளுக்கான இலக்கியம் படைப்பதற்கு கடின உழைப்பு. பொறுமை, சொற்களஞ்சிய அறிவு மிகவும் முக்கியம் ஆகும். குழந்தைகளின் கவிதைகள் அவர்களின் நாட்டப் பொருட்களைமையமாகக்கொண்டிருக்கவும்வேண்டும்.வீண் சொற்களையோ, வர்ணனைகளையோ, குழந்தைப் பாடல்கள் கொண்டிருப்பது கூடாது.இவற்றையெல்லாம் மனமிருத்தியே கவிஞர் அம்பி அவர்கள் குழந்தை இலக்கி யத்தைப் படைத்தார். இவர் தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் குழந்தைகளுக்கான கவிதைகளையும் தந்திருக்கிறார். அவுஸ்திரேலிய தமிழ்க்குழந்தைகள் தமிழில் பேச வேண்டு. பேசிப் பேசி மகிழ வேண் டும் என்பதே அவரின் பேரவாக இருந்தது. இந்த எண்ணத்தை மனமிருத்தியே அவுஸ்திரேலிய குழந்தை இலக்கியத்தைக் கட்டி எழுப்புவதில் அம்பி அவர்கள் பெரும்பங்கு வகித்தார் என்பதை இங்கு வாழும் தமிழர்கள் அனைவருமே ஒரு மனதாக ஏறுக்கொள்ளுவார்கள்.

'கொஞ்சும் தமிழ்' , 'பாலர் பைந்தமிழ்' என்னும் கவிதை நூல்களை குழந்தை இலக்கியமாய் அளித் திருக்கிறார். இவரின் அணுகு முறை அவுஸ்திரேலிய குழந்தைகளை மனமிருத்தியதுதான் என்பதே இங்கு முக்கியமாகும்.சூழலுக்கு ஒவ்வாத விடயங்களை யார் படைத்தாலும் அஃது பொருத்தம் அற்றதா கவே ஆகிவிடும். அப்படிப் பாடிஅமைப்பதை விட படைக்காமலே இருந்திடலாம். நீண்ட கால ஆசிரிய ப்பணி. பல நாடுகளில் ஆசியப்பணி. புலம் பெயர் நாடுகளில் உள்ள பிள்ளைகளின் உள்ளக் கிடக்கை இவற்றை எல்லாம் மிகவும் உன்னிப்பாகாகக் கவனத்தில் கொண்ட காரணத்தினால்த்தான் அம்பி அவர்களின் குழந்தை இலக்கியம் அவுஸ்திரேயாவில் முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது எனலாம்.

'நீங்கள் இனிய தமிழ் வேச வேண்டு. பேசிப் பழக வேண்டும். இனிமையாக பேசி மகிழவேண்டும். நீங்கள் இனிய பாடல்கள் பாட வேண்டு.பாடப் பழக வேண்டும். இனிமையாகப் பாடி மகிழ வேண்டு. நீங்கள் பாடல்கள் பாடி ஆட வேண்டும்.பாடி ஆடி மகிழ வேண்டும். பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்தல் வேண்டும். நீங்கள் பாடி ஆடும்போது அபிநயம் செய்து மகிழ வேண்டும்.அபிநயம் செய் யப் பழக வேண்டும்.அபிநயத்தால் எல்லோரையும் மகிழ்வித்தல் வேண்டும்.நீங்கள் பாடி ஆடி அபிநயஞ் செய்து மகிழும்போது அறிந்த சொற்களின் பொருளை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். புதிய சொற்களையும் அறிதல் வேண்டும். புதிய சொற்களுடன் அறிவு வளர்ச்சியும் பெறுதல் வேண்டும்.' என்று – ' கொஞ்சும் தமிழ் பாடல்கள் ' நூலில் அம்பி அவர்கள் தனது மனத்தினை வெளிப்படுத்தி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பியின் பாடல்கள் தனித்துவம் மிக்கன.குழந்தைகளின் நாவில் உச்சரிக்கக் கூடிய எளிய தமிழ், அவர்களின் சிந்தையில் பதியக் கூடிய ஓசை நயத்துடனான சொற்கோலங்கள். இதனால் குழந்தைகள் அந்நியப்பட்டு விடாமல் பாடலுடன் நெருங்கி ஒட்டுற வாடுகின்றனர். இதுவேதான் ' அம்பி ' என்னும் குழந்தை இலக்கியப் படைப்பாளருக்கு அவுஸ்திரேலியாவில் கிடைத்துள்ள முக்கியத்துவம் எனலாம்.

வினாவிடைமுறையிலேபலபாடல்களைஅமைத்திருக்கிறார். அங்கு குழந்தைகளின் உளவியலை அவர் நன்கு அறிந்து எழுதியிருக்கிறார் என்பதையே காணமுடிகிறது.அவுஸ்திரேலிய குழந்தைகளை மனமிருத்தி

'அம்பி மழலை' என்னும் குழந்தை இலக்கிய நூலை ஆக்கியிருக்கிறார்.கங்காரு அவுஸ்திரேலிய நாட்டின் அடையாளம். அதனை சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி இரசிப்பார்கள்.இந்த நாட்டில் உள்ள தமிழ் குழந்தைகளுக்கு விளங்காத விலங்குகளை அறிமுகப்படுத்தவோ அல்லது அவை பற்றி சொல்லுவதோ பொருத்தம் அற்றது என்பதை அம்பி அவர்கள் தெரிந்து காரணத்தால் ' ஆட்டுக்குட்டி எந்தன் குட்டி அருமையான சின்னக்குட்டி ' என்று பாடாமல்

**'முன் இரண்டு காலைத் தூக்கி**
**முன்னே பாய்ந்து செல்குவேன்**
**பின் இரண்டு காலில் துள்ளி**
**பாய்ந்து பாய்ந்து செல்லுவேன்**

**சின்னக்குட்டியை வயிற்று பையில்**
**செருகிக் கொண்டு செல்லுவேன்**

**என்னைப் போன்ற அன்னை யாரோ**
**என்று கேட்டுச் செல்லுவேன்**

**என்னைத் தெரியுமா - என்**
**பெயரைத் தெரியுமா ?**

என்று கங்காரு பற்றி குழந்தைகளுக்கு காட்டுகிறார் அம்பி.

'கொஞ்சும் தமிழ்' அழகிய வண்ணப்படங்களுடன் அவுஸ்திரேலிய குழந்தை இலக்கியமாய் வந்திருக் கிறது. அத்துடன் 'பாலர் பைந்தமிழ்' படைப்பும் சேர்ந்துவிட்டது.

'தமிழில்சிறுவர்இலக்கியம்இல்லாமைபெருங்குறையாகும். சிறுவர் இலக்கியத்தில் நாம் பின்தங்கி விட்டோம். அத்துறையில் 'அம்பி யுகம்' ஆரம்பமாகி விட்டது என்று நாம் பெருமையும் பூரிப்பும் அடைய வேண்டும்.' என ஈழத்து அறிஞர் அஸீஸ் அவர்கள் குறிப்பிடுகிறார்.

'அவுஸ்திரேலியச் சிறுவருக்கு மட்டுமல்ல புலம் பெயர்ந்து பிறமொழிச் சூழல்களில் வளரும் எல்லாச் சிறுவருக்கும் ஏற்ற வகையில் அம்பியின் பாடல்கள் அமைகின்றன'என்று கலாநிதி. கவிஞர் கந்த வனம் குறிப்பிடுகிறார்.இப்படி பலரும் அம்பியின் குழந்தை இலக்கியம் பற்றி விதந்தே நிற்கிறார்கள். தற் பொழு தொண்ணூறு அகவை கடந்து அவுஸ்திரேலிய மண்ணில் அம்பி அவர்கள் வாழ்ந்த காலம் அவுஸ் திரேலியக் குழந்தை இலக்கியத்துக்குக் கிடைத்த பெருவரம் என்றுதான் எண்ண வேண்டும். கவி மணி தேசிகவிநாயகம் பிள்ளைபோல், இன்று அவுஸ்திரேலிய கவிமணியாய் அம்பி அவுஸ்திரேலிய குழந்தை இலக்கியத்தில் முக்கிய இடத்தினைத்தினைப் பெற்றுத் தமிழ்க் கவிதையுலகில் வாழ்ந்து கொண்டே இருப்பார். அவர் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார் என்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாமல் அவரது அழகு தமிழ்க் கவிதைகள் அழுதபடியே இருக்கின்றன.

**அம்பியெனும் தமிழ்த்தும்பி அவ்வுலகம் சென்றது**
**அமரர்க்குத் தமிழமுதை அளித்திடவே சென்றது**
**குழந்தைக்குக் குழந்தையாய் குறைவின்றி கவிஈந்தார்**
**குவலயத்தைவிட்டுவிட்டுகவிசொல்லச்சென்றுவிட்டார்**

**அன்னைத்தமிழோடு ஆங்கிலத்தில் கவிசொன்னார்**
**அனைவர்க்கும் விளங்கும்படி அழகாகக் கவிசொன்னார்**
**விஞ்ஞானம்கற்றாலும்விருப்புடனேதமிழணைத்தார்**
**விண்ணவர்கள் விரும்பியதால் அவ்வுலகம் சென்றுவிட்டர்**

**தமிழன்னை அம்பியை தடவியே கொடுத்தாள்**
**அதனாலே அழுகுதமிழ் அவரிடத்து நிறைந்தது**
**ஆசானாய் இருந்தார் ஆளுமையாய் வலம்வந்தார்**
**அவருடைய தமிழ்கேட்க ஆண்டவனே அழைத்துவிட்டான்**

# 3 தமிழக படகோட்டிகளின் தண்டனையை இரத்துச் செய்தது யாழ். மேல் நீதிமன்றம்

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி படகினை செலுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 06 மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தொழிலாளிகளின் சிறைத்தண்டனையை யாழ். மேல் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

இலங்கை கடற்பரப்பினுள் கடந்த பெப்ரவரி மாதம் 12 மற்றும் 22 ஆகிய திகதிகளில் படகுகளை அத்துமீறி செலுத்திய குற்றச்சாட்டில் கைதான மூன்று படகோட்டிகளுக்கு 06 மாத சிறைத்தண்டனையை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் வழங்கியிருந்தது.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மூன்று படகோட்டிகளும், தமது சட்டத்தரணி ஊடாக யாழ். மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர்.

அதன்படி, மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு விசாரணையின்போது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றால் 3 படகோட்டிகளுக்கு வழங்கப்பட்ட 06 மாத சிறைத்தண்டனையை ரத்து செய்து, மூவரையும் விடுதலை செய்வதாக யாழ். மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதனையடுத்து, மூன்று படகோட்டிகளும் எதிர்வரும் 30ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விடுவிக்கப்படவுள்ளனர். (05)

# பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் ஊடக சந்திப்பு



(எம்.எச்.எம் சியாஜ்)

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பானது காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் வாழுகின்ற மலையக தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து கொழும்பில் நடத்திய ஊடக ஜி சந்திப்பில் அரச ஆட்சியாளர்களுக்கு 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

அவைகளாவன -

பெருந்தோட்ட மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமையை உறுதிப்படுத்தும் முகமாக 1993 - 2018 வரையான காலப்பகுதியில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தோட்டங்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு உறுதிகளை வழங்குவதுடன் மலையக மக்களுக்காக அரசு தற்போது முன்னெடுத்து வரும் காணி மற்றும் வீடமைப்புத் திட்டத்தில் காலி மற்றும் மத்தறை மாவட்டங்களில் வாழும் மலையக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்தோடு இதுவரை காணி கிடைக்கப்பெறாத மலையக மக்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மலையக சமூகம் சம அந்தஸ்தை பெறுவதற்காக கல்வி மற்றும் ஆளுமையை விருத்தி செய்வதற்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தென் மாகாணத்தில் காணப்படும் பாடசாலைகளுக்கு சகல பாடங்களுக்குமான சிறந்த ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

தென் மாகாணத்தின் மலையக பிரதேசங்களில் இருந்தே அதிகமான பெண் பிள்ளைகளே பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுகின்றனர். இது சார்ந்த கல்வி அமைச்சு கல்வி திணைக்களம் ஆழமான பகுப்பாய்வு ஒன்று செய்து தென் மாகாண மலையக பிள்ளைகளின் கல்வியை உயர்ந்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தனியார் தோட்டங்களில் வாழுகின்ற மலைய மக்கள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்படுகின்றனர். பாடசாலைக்கு செல்ல வேண்டிய வயது பிள்ளைகள் தொழிலாளர்களாக செயற்படுவதாக கேள்விப்படுகின்றோம். எனினும் இம்மக்கள் தாங்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியாதவர்களாக பயந்து வாழ்கின்றனர். எனவே, இது தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை நியமித்து. இவர்களுக்கான நியாயத்தை நிலைநாட்டுவதற்காகன செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் ரீதியில் மிக மோசமான பாதிப்புக்குள்ளே வாழ்ந்து வருகின்ற மலையக பெண்களுக்கான சுகாதார அடிப்படை வசதிகளை அபிவிருத்திச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள 1000 ரூபா சம்பளத்தை நிபந்தனைகள் இன்றி வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுப்பதோடு இந்த விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக கண்கானிப்பதற்கு கண்காணிப்பு குழு ஒன்றை நியமித்தல். தற்போதைய பொருளாதார நிலைமைக்குள் தமது வாழ்வை கொண்டு நடத்துவதற்கு 1000 சம்பளம் எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை. எனவே வாழ்க்கை செலவுக்கு ஏற்ற வகையில் சம்பள உயர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தோட்டத்தில் தொழில் புரிகின்ற மலையக பெண்களின் எதிர்கால சேமிப்புகளான ஈ.பீ.எப் மற்றும் ஈ.டீ.எப் எனபவற்றை இல்லாமல் செய்துள்ளதுடன் மலையக மக்களின் உழைப்பைச் சரண்டும் போட் லீவ் அல்லது தேயிலையை குத்தகைக்கு கொடுத்துள்ள முறையை உடனடியாக நீக்கி பழைய முறையில் பெண்களுக்கான நாளாந்த தொழிலை வழங்க வேண்டும்.

தமது குடும்பத்தின் வறுமை மற்றும் பிள்ளைகளின் எதிர்காலத்தை சீராக்கும் என்னத்துடன் வீட்டுபணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்லும் மலைய பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக கண்கானித்தல் மற்றும் அவர்களைப் பாதுகாப்பதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தென் மாகாணத்தில் வாழ்கின்ற 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து மலையக பெண்களையும் வாக்களர் பட்டியலில் சேர்த்து கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பெண்களுக்காக பிரதேச செயலகம் ஊடாக நடைமுறைப்படுத்தும் அபிவிருத்தி திட்டங்கள் மலையக பெண்களையும் சென்றடைவதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல்.

பெருந்தோட்ட பகுதிகளில் வாழுகின்ற சிறுவர்கள் மற்றும் தாய்மார்களின் போஷாக்கு குறைபாட்டைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்கக் கூடிய விசேட வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்தல்.

மலைய பிரதேசங்களில் தொழிலின்றி வாழ்கின்ற இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேற்படி ஊடக சந்திப்பு பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்டனி ஜேசுதாஸன் தலைமையில் கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# புத்தளம் வலயத்தில் இரு அதிபர்கள் கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு



(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் கல்வி வலயத்தில் உள்ள இரண்டு தமிழ்மொழி மூலம் அதிபர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் அதிபர் சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை-3 இற்கு தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு தெரிவாகியுள்ளனர்.

புத்தளம் வலயத்தில் உள்ள சாஹிரா முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் அதிபர் ஏ.மொஹமட் ஜவாத் மற்றும் பாலாவி முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ. மொஹமட் நவ்ஷாத் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டு புத்தளம் வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# மறைந்த ஊடகவியலாளர் சிவராமின் 19ஆவது நினைவு தினம் வவுனியாவில்



ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

அமையத்தின் செயலாளரும் ஊடகவியலாளருமான பரமேஸ்வரன் கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் அன்னாரது திருவுருவப் படத்துக்கு மலர் தூவி, ஒளிதீபம் ஏற்றி, அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, அவர் பற்றிய நினைவுப் பேருரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் நடராசா ஜனகதீபன் ஆற்றினார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு அமரர் சிவராமுக்கு அஞ்சலி செலுத்தினர்.(05)




# அச்சுவேலியில் வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்ட இருவர் கைது

## முதியவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் - அச்சுவேலி உள்ள பத்தமேனி பகுதியில் சனிக்கிழமை இரவு வீடொன்றுக்குள் நுழைந்து இருவர் வன்முறையில் ஈடுபட்டதை தொடர்ந்து, சந்தேகநபர்கள் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த வன்முறையின் போது அவ்வீட்டின் கண்ணாடிகள் மற்றும் வான் என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களின் தாக்குதலில் காயமடைந்த 70 வயதான முதியவர் சிகிச்சைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொழிலில் உள்ள போட்டியே இந்த வன்முறை தாக்குதலுக்கு காரணம் என அச்சுவேலி பொலிஸார் சந்தேகிப்பதோடு, இது தொடர்பான மேலதிக விசாரணைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# வித்தியாசமான சிந்தனைகளின் வித்தகன் புதுவைப் புயல் பாரதிதாசன்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**

' பாட்டுக்கொரு புலவன் பாரதியடா ' என்று போற்றப்பட்டவர்தான் எட்டயபுரம் தந்த எங்கள் தமிழின் சொத்து பாரதியார். அவரின் கருத்துக்களை மனமிருத்தி அவரின் பாதையில் பல கவிஞர்கள் பயணப் பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கவிஞரும் பாரதியைப் பார்த்த பார்வைகள் அவரவர் சிந்தனைகளாக மலர்ந்திருக்கின்றன. பாரதியாரின் காலத்தில் கவிமணி தேசிக விநாகம் பிள்ளை இருந்திருக்கிறார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை இருந்திருக்கிறார்.பாரதிதாசனும் இருந்திருக்கிறார். கவிமணி யின் சிந்தனை வேறாயும், நாமக்கல்லார் சிந்தனை வேறாயும் , பாரதிதாசன் சிந்தனை வேறாகாவுமே அமைந்திருக்கிறது. இவர்கள் மூவருமே பாரதியைப் போற்றியாவர்களாகவே இருந்திருக்கிறார்கள். எட்டய புரத்துத்துப் பாரதிக்கு எட்டவே போகாமல் கிட்டவே நிற்கும் வாய்ப்பு புதுவையில் கால்பதித்த கனகசுப்புரத்தினத்துக்கே வாய்த்திருக்கிறது. கனகசுப்புரத்தினத்துக்குத்தான் எட்டயபுரத்து மகாகவி பாரதியின் ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. அந்த ஆசீர்வாதம்தான் ' பாரதிதாசன் ' என்று இன்றுவரை அவரை சமூகத்தில் பார்த்திடக் , கொண்டாட , வைத்திருக்கிறது என்பதைக் கருத்திருத்தல் அவசிய மாகும்.

பாரதியையும் புரட்சிக்கவி என்று அழைக்கின்றோம். அவரின் வாரிசாக வாய்த்திருக்கும் பாரதிதாச னையும் அழைக்கின்றோம். இருவரையும் புரட்சியின் வடிவமாகவே பார்ப்பதையே சமூகமும் விரும்பி நிற்கிறது என்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும்.பாரதி வாழ்ந்த காலமோ முப்பத்தொன்பது ஆண்டுக ளேயாகும். ஆனால் பாரதிதாசன் அவரைவிட இருமடங்கு காலம் வாழ்ந்திருக்கிறார்.பாரதியின் தாசனா கவே வாழ்ந்திடவே பாரதிதாசன் ஆசைப்பட்டார். அதுவே தனக்கும் , தனது வாழ்வுக்கும் மிகவும் பெருமை யானது என்றும் கூட அவர் எண்ணியே இருந்தார். பாரதியைப் போலவே அவரும் புதிதாய் , புரட்சியாய். சிந்தித்தார். சிந்தித்தவற்றைத் தன்னுடைய படைப்புகள் வாயிலாகச் சமூகத்தில் இடம் பெறவும் செய் தார். பாரதியின் தாசனாய் அவரின் வாரிசாக வாய்த்த பாரதிதாசன் தன்னுடைய காலத்துக்கு ஏற்ப தன் னுடைய சிந்தனைகளை புதிதாய் வெளிப்படுத்தினார் என்பதை மறுத்துரைத்துவிடல் முடியாது. பாரதி யார் வாழ்ந்த காலம் பாரததேசம் அன்னியத்துக்கு அடிமைப்பட்டிருந்த காலம்.அவரின் வாரிசாய் வாய்த் த பாரதிதாசன் காலமே சுதந்திரக் காற்றினைப் பாரததேசம் சுவாசித்த காலமாகிவிட்டது. அதனால் தன் னுடைய குருவின் சிந்தனைகளை விட வித்தியாசமாய் சிந்திக்கும் அவசியம் பாரதிதாசனுக்கு அவசிய மாய் ஆகிவிட்டது. அதனால் பாரதியின் சிந்தனைப் பாதையில் பயணித்தாலும் , தனக்கென வித்தியாச மான சிந்தனைகளை பாரதிதாசன் வெளிப்படுத்தி நிற்கிறார் என்பதுதான் உண்மை நிலையாகும்.

தம்முடைய குருவான பாரதியின் பிரிவை முன்னிட்டு பாரதிதாசன்

**நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ ......**
**திறம் பாட வந்த மறவன் , புதிய**
**அறம் பாட வந்த அறிஞன்**

இவ்வாறு உளமார உரைத்து நின்றாலும் அவரின் சிந்தனையானது மட்டும் பல நிலைகளில் வித்தியாச மாய் அமைகின்றது என்பதுதான் உண்மையாகும். பாரதி தமிழைப் போற்றுகின்றார். அவரின் வாரிசான பாரதிதாசனும் போற்றுகின்றார். பாரதி...

**' யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம் '**

என்று உலகத்துக்கு உரத்துத் துணிவுடன் சொன்னவர் என்றவகையில் பாரதி முன்னிற்கிறார் என்பதை எவருமே மறுத்திடல் இயலாது. ஆனால் அவரின் வாரிசாய் வாய்த்த பாரதிதாசனோ வித்தியாசமாய் தனது சிந்தனையை முன் வைக்கிறார்.

**' தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் '**

உலகமொழிகளில் இனிமையானது தமிழென்று குருவானவர் மொழிகின்றார். அவரின் மொழிதல் புதுமையானதுதான். ஆனால் வித்தியாசமாய் சிந்தித்து தமிழினை உயிர் என்று காட்டுவதும் , இன்பத் தமிழ், அமுதம் , என்று காட்டுவதும் பாரதிதாசனின் வித்தியாசமான சிந்தனையாய் வெளிப்பட்டு நிற்கிற தல்லவா ! அமுதம் என்பது நிரந்தராமாய் உயிருடன் வாழப் பண்ணுவதாகும். தமிழும் எம்மை யெல்லாம் நிரந்தரமாய் வாழப் பண்ணும் என்னும் சிந்தனை, வியப்பாய் மலர்கிறதல்லவா ? பாரதியின் மொழிப் பற்றானது போற்றப் படவேண்டியதே. அன்னிய மொழியான ஆங்கிலத்தை அறவே வெறுத்தார். அன்னை மொழியான தமிழினையே அகத்தில் இருத்தினார். அரியாசனத்தில் அமர்த்தியே பார்த்தார். பாரதி வட மொழியிலும் வல்லமை பெற்று விளங்கினார். அவருக்கு வடமொழியிலும் பற்றிருந்தது. ஆனால் அவரின் வழியில் பயணத்தை ஆரம்பித்த பாரதிதாசனோ முழுக்க முழுக்க தமிழ்மொழிப் பற்றா ளராகவே தன் வாழ் நாளெல்லாம் விளங்கினார்.வடமொழியினை அவர் ஒதுக்கியே நின்றார். திராவிடமே அவரின் சிந்தையில் நிறைந்து காணப்பட்டது. இது அவரின் வித்தியாசமான சிந்தனை என்றும் சொல்ல லாம் அல்லவா !

குருவானபாரதியின்தமிழ்மொழிபற்றியசிந்தனையிலிருந்து வித்தியாசமாய்சிந்தனையினைத்தருவ தோடு அதற்காக அவர் பயன்படுத்தும் சொற் கோவைகளும் வித்தியாசமானதாகவே வருகிறது. மரபு யாப்பினைப் பயன் படுத்தினாலும் இங்கு வித்தியாசமாய் சிந்தித்து கூழைக் கூத்தரின் ஆட்டத்தை மனமி ருத்தி அதனை ஆட்டத்தோடு கூடிய விதமாய் இசையுடன் பாட க்கூடியவகையில் தமிழையும், தமிழ் சமூக த்தையும் சிந்தித்திந்து அவரால் வழங்கப்பட்ட வித்தியாசமான சிந்தனையாய் இப்பாடல் அமைகிறது.



**திடுகிடும் திடுகிடும் திடுகிடும் திடுகிடும்**
**...............................................................................**

**அஃகஃக கும்பிட்றேன் அல்லா ருக்கும்**
**அஃகஃக வரிஞ்சலா அமைந்திருங்க**
**மக்களெ பெத்த மகரா சருங்க .....**

**என்னடா தம்பி ?**
**ஏண்டா அண்ணா ?**
**இதோபார் தம்பி எலும்புக்கூடு**
**சதையும் இல்லே சத்தும் இல்லை**
**ஆமாம் திடுகிடும் அதுக்குப் பேர்என்னா ? ...**
**இந்த மருந்துக்கு என்னா பேரு ?**
**உள்ளெ தொட்டா உசிரில் இனிக்கும் ;**
**தெள்ளுதமிழ் தம்பி தெள்ளுதமிழ் இதுதான் !**
**இந்த மருந்தே எலும்புக் கூட்டில்**
**தடவுறேன் தம்பி அடிமோ ளத்தை !**
**திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்**

**சிரித்தது பாரடா செந்தமிழ்க் கூடு !**
**விரிந்தது பாரடா அழிந்தநம் நாடு !**
**பாடுது பாரடா பைந்தமிழ் நாடு ....**
**தாயி மாரே தக்கப்ப மாரே !**
**மாயம் இல்லே மந்திரம் இல்லே**
**கருத்து வேணும் நம்ப**
**வருத்தம் நீங்க தேடணும் வழியே !**

தமிழினமானது எலும்புக்கூடாய் இருக்கிறதாம். அதில் சதையும் இல்லையாம் ! சத்துமே இல்லையாம் ! அதற்குச் சதையும் சத்தும் தந்து புத்துயிர் ஊட்டவேண்டும் என்னும் வித்தியாசமான சிந்தனையினைக் காட்டும் பாரதிதாசனை வியக்காமல் இருந்திட முடியுமா !

பாரதி வாழ்ந்த காலம் அடிமையிருள் சூழ்ந்திருந்த காலம். பாரதியின் பார்வை பாரததேசத்தின் அடங்கி லும் பரவியே இருந்தது.பாரதத்தாயை மீட்டிடும் பாங்கில் பாரதியின் சிந்தனை அமைந்திருந்தது. ஆனால் அவரின் வாரிசான பாரதிதாசன் காலம் அவரின் சிந்தனையினை வேறு விதமாக்கி விட் டது.பாரதியின் வழியில் பயணித்தாலும் அத்தனையையும் ஏற்று நிற்க அவர் விரும்பாதவராய் வித்தியாசமாய் ஒவ்வொ ன்றையும் வெளிப் படுத்துகிறார். அந்த வகையில் ஒட்டு மொத்த இந்தியாவைவிட்டு அவரின் சிந்தனை யானது திராவிட மீட்பாய் மாறுகிறது. பாரதி தமிழை, தமிழினத்தைப் போற்றினார். அதற்காக பலவற்றை உரக்கவே சொன்னார். ஆனால் பாரதிதாசனோ திராவிடச் சிந்தனையாளராய், தமிழ்மொழியின் அடை யாளமாய் தனது வித்தியாசமான சிந்தனைகளால் எழுந்து நிற்கிறார்.

சமய நம்பிக்கையினை , தெய்வ நம்பிக்கையினைப் பாரதி கைவிட விரும்பவேயில்லை. மூட நம்பிக்கை களை எதிர்த்தார். வெறுத்தார். ஆனால் தெய்வம் இருக்கிறது என்பதில் ஆணித்தரமாய் பாரதி வாழ்வெல் லாம் இருந்தார். இந்த இடத்தில் அவரின் வாரிசான பாரதிதாசன் வித்தியாசமாய் சிந்திக்கிறார். ஆரம்ப த்தில் சக்தியைப் பாடியே பாரதியின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர் பிற்பாடு தெய்வீக சக்தியை விட்டு விட்டு மனித சக்தியையே பாடும் நிலைக்குள் வந்து விடுகிறார். பாரதி நாத்திகர் அல்ல. அவருள் ஆத்தீ கம் அமர்ந்தே இருந்தது. ஆனால் வித்தியாசமாய் சிந்தித்த காரணத்தால் பாரதிதாசன் முழுதுமே நாத்தி கராய் மாறி அதன் வழியில் பயணப்பட்டு , அது சார்ந்த அரசியலிலும் தன்னை ஈடு படுத்திக் கொள்ளுகி ன்றவராய ஆகியே விடுகிறார். இதனால் அவரின் சிந்தனைகள் தன்னுடைய குருவின் சிந்தனைகளிலிரு ந்து வித்தியாசமாய் புதிய பார்வையினையே காட்டுவதாகவே ஆகியும் விடுகிறது எனலாம்.

கல்விபற்றிய பாரதியின் சிந்தனையிலும்கூட பாரதிதாசன் வித்தியாசமாகவே தன்னுடைய சிந்தனை களை விதைக்கின்றார். பாரதியின் கல்வி பற்றிய சிந்தனையினை நோக்கும் பொழுது -

**வயிற்றுச் சோறிட வேண்டும் - இங்கு**
**வாழும் மனிதருக்கு எல்லாம்**
**பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்**

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

**வீடுதோறும் கலையின் விளக்கம்**
**வீதிதோறும் இரண்டொரு பள்ளி**
**நாடுமுற்றிலும் உள்ளவூர்கள்**
**நகர்களெங்கும் பலபலபள்ளி**
**தேடு கல்வியிலாத தொருவூரைத்**
**தீயினுக்கு இரையாக மடுத்தல்**

என்று தன்னுடைய கல்விபற்றிய சிந்தனையைப் பாரதி இப்படிக் காட்டி நிற்கிறார். பெண்களைக் கண்க ளாய் காணும் பாரதி பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக்கிடக்காமல் வெளியில் வந்து கற்றுத் தேர்ந்திட கல் விச் சிந்தினையினை விதைத்தும் நிற்கிறார். புதுமைப் பெண்களாய் பெண்கள் வரவும் அழைப்பினை விடுக் கிறார்.

பாரதிவழியில்கல்விபற்றிச்சிந்தித்தாலும்தனக்கேஉரித்தான வித்தியாசமான சிந்தனைகளையும் அவர் முன்வைக்கிறார் என்பதுதான் கருத்திருத்த வேண்டிய விடயமாகும். பாரதிபோல் பெண்கல்வியை வலியுறுத்துகின்றார். பாரதியின் பார்வை வேறு . பாரதிதாசனின் பார்வையோ வேறு.

**' கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்**
**கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள் '**

**' மகளிரெலாம் கல்வியறி வொழுக்கமுள ராயின்**
**மருத்துவமே வேண்டாவாம் பிணிமூப்பு வாரா '**

**'கல்வியறிவுடைய பெண்கள்**
**திருந்திய கழனி அங்கே**
**நல்லறி வுடைய மக்கள்**
**விளைவது நவில வேநான் '**

**'கல்வியில்லாத பெண்கள்**
**களர்நிலம் அந்நிலத்தில்**
**புல்விளைந் திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை '**

**'கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்**
**கல்வைத்த நகை தீராத ரணம் '**

தொடர்ச்சி மறுபக்கம்.....

# வித்தியாசமான சிந்தனைகளின்.....

**'பெற்றநல் தந்தைதாய் மாரே - நும்**
**பெண்களைக் கற்கவைப் பீரே**
**இற்றைநாள் பெண் கல்வி யாலே - முன்**
**நேறவேண் டும்வைய மேலே '**

பெண்கள் கல்வியின் சிந்தனையினைப் பாரதிதாசன் வித்தியாசமாய் வெளிப்படுத்துகிறார். சிறுவர்க் குக் கல்வி, ஆடவர்க்குக் கல்வி, முதியோர்க்குக் கல்வி உடல் ஊனமுற்றவர்க்குக் கல்வி என்று பாரதிதாச னின் புதிய சிந்தனைகள் எழுந்து நிற்கின்றன.

பொதுவுடமை பற்றிய வகையிலும் பாரதிதாசன் வித்தியாசமாய் சிந்திக்கிக்கிறார்.

**சித்திரச் சோலைகளே - உமை நன்கு**
**திருத்தஇப் பாரினிலே - முன்னர்**
**எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனர்**
**ஓஉங்கள் வேரினிலே**

**நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு**
**நெல்விளை நன்னிலமே - உனக்கு**
**எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை**
**இறைத்தனர் காண் கிலமே**

**தாமரை பூத்த தடாகங் களே உமைத்**
**தந்த அக் காலத்திலே - எங்கள்**
**தூய்மைச்சகோதரர்தூர்ந்துமறைந்ததைச்**
**சொல்லலோ ஞாலத்திலே**

சோலைகளைப் பார்க்கிறார்.வயல்களைப் பார்க்கிறார்.தாமரைத் தடாகங்களைப் பார்க்கிறார். அந்தப்பார்வையையினூடாகஅதற்காகஉழைத்துப் பாடுபட்ட உழைப்பாளிகளை அவர் மனம் எண்ணுகிறது. இப்படி எண்ணும் எண்ணமேதான் பாரதிதாசனின் புதிய சிந்தனையாக, வித்தியாசமான சிந்தனையாக இங்கே வந்து நிற்கிறது அல்லவா!

**ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்**
**உடையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ**

சமத்துவத்தை இப்படியாய் சிந்திந்து வித்தியாசமாய் பாரதிதாசனால்த்தான் பார்த்திட முடியும்.

**மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற**
**காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே**

**வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்**
**தூண்டாவிளக்காய்த்துலங்கும்பெருமாட்டி**

என்று சமூக சிந்தினையினை சீர்திருத்த நோக்கில் பார்த்து வித்தியாசமான சிந்தனையாக தாலாட்டுப்பாடியவர் என்றவகையில் பாரதிதாசனை வியந்து பாராட்டியே ஆகவேண்டும்.

கவித்துவம் மிக்கவர் பாரதிதாசன். கவிதை எழுதினார். நாடகம் எழுதினார். கட்டுரைகள் எழுதினார். நூல்கள் பல எழுதினார். திரையிலும் ஜொலித்து நின்றார். எங்கு சென்றாலும் பாரதிதாசன் என்னும் முத்திரையினைப் பதித்தே நின்றார். ' மகாகவி பாரதியார் தமிழனினத்துக்கு விட்டுப்போன மகத்தான மூன்று சொத்துக்களானவை ' குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, ' பாரதிதாசன்' என்று எழுத்துலக ஜாம்ப வான் கல்கி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு பாரதிதாசன் பார்க்கப்படுவதற்கு முக்கியமான காரணம் எது தெரியுமா அவரிடம் காணப்பட்ட வித்தியாசமான சிந்தனைகளே.

# காதலியின் வீடு தேடிச்சென்றவர் குளியாப்பிட்டியில் திடீர் மாயம்

காதலியின் வீட்டிற்குச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல்போன சம்பவம் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

உணவகமொன்றை நடத்திச் செல்லும் இவர் கடந்த 6 நாள்களாகக் காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில், இவர் கடந்த 22 ஆம் திகதி அன்று தனது உணவகத்தில் பணிபுரியும் நபரொருவருடன் குளியாப்பிட்டிய வஸ்ஸாவுல்ல பகுதியில் உள்ள தனதுகாதலியின்வீட்டிற்குச்சென்றுள்ள நிலையில் காணாமல் போயுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞர் சென்றதாகக் கூறப்படும் வீட்டின் உரிமையாளரான காதலியின் தந்தை காணாமல் போன இளைஞரின் நண்பர் ஒருவரின் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு ' நான் ஒரு தந்தையாக எனது மகளுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுத்தேன். நான் அவனைக் கொன்றுவிட்டேன்' எனக் கூறியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குளியாப்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் காரொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

## தொடருந்துகளுக்கான

# நிகழ்நிலை இருக்கைப் பதிவு சிக்கலை தீர்க்க இதுவரை நடவடிக்கை இல்லை

நிகழ்நிலை (ஒன்லைன்) மூலம் தொடருந்து இருக்கை முன்பதிவு நெருக்கடியைத் தீர்க்க அதிகாரிகள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

உதவி போக்குவரத்து அத்தியட்சகர் ஒருவரின் கீழ் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட மறுப்பதாக, ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் , பல மோசடிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெறும் இடமாக ரயில்வேத் திணைக்களம் மாறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# 50 பல்கலை மாணவர்களுக்கு மாதாந்த உதவி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை வழங்கியது

பல்கலைகழங்களுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான கற்றலுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்வி வளர்ச்சி அறக் கட்டளையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றான பல்கலைக் கழக மாணவர்களுக்கான உதவி திட்டத்தின் கீழ் இந்த வருடத்திற்கான செயற்றிட்டத்தின் கீழ் பேராதனை, கொழும்பு, மொரட்டுவ, ஸ்ரீஜெயவர்த்தனபுர,

யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைகழகம், சப்பிரகமுவ, வவுனியா, ஊவாவெல்லஸ பல்கலைகழங்களுக்கு கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டகளப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 50 மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வே இடம்பெற்றது.

லோட்டன் இராஜ்குமாரின் நினைவாக அவரது மகன் இராஜ்குமார் கேமச்சந்திரனின் நிதி அனுசணையில் இந்த உதவி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர் த. சத்தியமூர்த்தி தலைமையில் இயங்கி வருகின்ற கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை மீள்குடியேற்றத்திற்கு பின்னர் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு புலம் பெயர்

மற்றும் உள்ளூர் கொடையாளிகளின் அனுசரணையில் இந்த உதவியை வழங்கியுள்ளது.

உதவியைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தங்களது பல்கலைகழக கல்வியைப் பூர்த்திசெய்த பின் நிரந்தர தொழில் வாய்ப்பை பெற்ற பிற்பாடு பெற்றுக்கொண்ட தொகையைத்தங்களது வசதிகேற்ப மீளச் செலுத்த வேண்டும். அவ்வாறு மீளச் செலுத்தப்படும் தொகை பிரிதொரு மாணவருக்கு வழங்கப்படும் என்ற நிபந்தனையின்கீழ் இந்த உதவி திட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

(05)

# தந்தை செல்வாவின் 47ஆவது நினைவு!

## திருமலையிலும் அனுஷ்டிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையானது கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வநாயகம் அவர்களது 47 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நினைவு எழுச்சி கூட்டமொன்றை சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்தனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட தலைவர் ச.குகதாசன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)









# காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் திருமலை தம்பலகாமத்தில் சாட்சியம்





(எச் எம் ஹலால்தீன்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் தகவல் பெறும் செயற்பாடுகள் சனிக்கிழமை தம்பலாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழு உறுப்பினர்களால் சனிக்கிழமை காலை 10.30



மணி முதல் தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையின் கீழ் இடம் பெற்ற இந்நிகழ்வில், காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுளந்த, காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் மன்னார் மாவட்ட பிராந்திய இணைப்பாளர் நிஷாந்தன், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விசாரனைக்காக, தம்பலகாமம், கந்தளாய், மொறவெள பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த சுமார் 48 குடும்பங்கள் காணாமல் போனோர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர்.

காணாமல்ஆக்கப்பட்டோர்சார்பில்உறவினர்கள் வாக்களித்ததோடு அதற்கான ஆதாரங்களையும் சமர்ப்பித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## கிராமிய விளையாட்டு விழா சாய்ந்தமருதில்





(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி, சாய்ந்தமருது பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு ஸ்மார்ட் யூத் கிராமிய விளையாட்டு விழா சாய்ந்தமருது பௌசி







விளையாட்டு மைதானத்தில் மிகவிமர்சையாக சனிக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம் எம் ஆஷிக் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீஸன் மற்றும் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ. சி. அஹமட் சாபிர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிக்கா, சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா, சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் எம்.யூ. ஹில்மி, வலய உதவி முகாமையாளர் எம். எஸ்.எம். நௌஷாத், இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஸமீஹுல் இலாஹி உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டு அதிகாரிகள், இளைஞர் சேவைகள் சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் பல்வேறு கிராமிய விளையாட்டுக்கள் இடம்பெற்றதுடன் வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (05)




காலைக்கதிர்
Kalaikkathir

# நாவிதன்வெளி – சாளம்பைக்கேணி தாருல் ஹிக்மா கல்லூரிக்கு ஹரீஸ் நிதி ஒதுக்கீடு



(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்லமாவட்டநாடாளுமன்றஉறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாவிதன்வெளி பிரதேச சாளம்பைக்கேணி தாருல் ஹிக்மா கல்லூரிக்கு நிதி ஒதுக்கப்பட்டு அதற்கானஆவணங்கள்கல்முனைஅல்-ஹாமிய்யா அரபுக் கல்லூரி முதல்வரும், தாருல் ஹிக்மா கல்லூரி முதல்வருமான ஏ.சி. தஸ்தீக் (மதனி, ஹாமி) தலைமையிலான கல்லூரி நிர்வாகத்திடம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வழங்கி வைத்தார்.

நாவிதன்வெளி பிரதேச சாளம்பைக்கேணி தாருல் ஹிக்மா கல்லூரி நிர்மாண பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட இந்த நிதிக்கான ஆவணங்களை கையளித்தநிகழ்வில்ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி.ஏ. நஸார் ஹாஜி, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, பள்ளிவாசல் மற்றும் மதரஸா நிர்வாகத்தினர் எனப பலரும் கலந்து கொண்டனர். (05)

# குப்பைகள், கழிவுப் பொருள்களால் அசுத்தமடைகிறது நுவரெலியா நகர்



நாட்டின் மிக முக்கியமான சுற்றுலா நகரமாக விளங்கும்நுவரெலியாவின்பலஇடங்கள் குப்பைகள், கழிவுகளால் அசுத்தமாகி, சுகாதார சீர்கேட்டினை எதிர்கொண்டு வருகின்றன.

இலங்கையில்பிரசித்திபெற்றசுற்றுலாதளங்களில் முக்கியமான நுவரெலியாவுக்கு ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது வழக்கமாகும். சர்வதேச அளவில் புகழ்பெற்ற இச்சுற்றுலா நகரில் சுகாதார நிலை பாதிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக நுவரெலியா நகரின் பல இடங்களில் போதிய குப்பைத் தொட்டிகள் வைக்கப்படாத காரணத்தால் கண்ட இடங்களில் குப்பைகள் வீசப்படுகின்றன. இதனால் நகரம் அசுத்தப்பட்டு வருவதோடு, சுகாதார சீர்கேடான நிலையையும் எதிர்கொண்டு வருகிறது.

மேலும், அங்கே சுகாதாரத்தை பேணும் வகையிலானஅடிப்படைவசதிகளைநிறைவேற்றுவதில் நுவரெலியாமாநகரசபைசற்றுபின்தங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

நுவரெலியாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்கள் ஹோட்டல்கள், உணவு விடுதிகளுக்கு சென்று உணவு சாப்பிடுவதை தவிர்த்துவிட்டு, உணவை சமைத்து எடுத்துக்கொண்டு வாகனங்களில் வருகின்றனர்.

இவ்வாறு வருபவர்கள் நுவரெலியா பிரதான நகர், ஹக்கல பூங்கா, விக்டோரியா பூங்கா, கிறகறிவாவிகரைபோன்றபகுதிகளில் வீதியோரங்களிலும்புல்வெளிகளிலும்மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளிலும் தங்களது வாகனங்களை நிறுத்தி சாப்பிடுகின்றனர்.

இவர்கள் சமைத்துவிட்டு அல்லது கொண்டுவந்த உணவை சாப்பிட்டு முடித்துவிட்டு, எஞ்சிய உணவுக் கழிவுகள், மாமிசங்கள், எலும்புத்துண்டுகள், பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள், எளிதில் மக்கிப்போகாத பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப்பொருள்களை அதே இடங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் வீசிச் செல்லும் இந்த கழிவுகளை உட்கொள்ள கால்நடை விலங்குகள் அப்பகுதியை முற்றுகையிடுகின்றன. இதில் நாய்கள், பறவைகள் கழிவுகளை நாலாப்புறமும் இழுத்துச் சென்று போடுவதால் நடைபாதைகள் உட்பட நகரின் பல இடங்களும் அலங்கோலமாக காட்சி தருகின்றன. இதனால் வீதி வழியே செல்லும் வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதியில் எறியப்படும் குப்பைகளால் ஈக்களின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக சாதாரண நோய்களும் தொற்றுக்களும் பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சுற்றுலாப்பயணிகள் அதிகம் வருகை தரும் இடங்களில் தேவைக்கேற்ப குப்பைத் தொட்டிகளை வைப்பது அவசியம் எனவும் அப்பகுதிகளுக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனை கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யுவதி 14 நாள்களின் பின் சாவு

மின்னேரிய கிரித்தல பகுதியில் நடைபெற்ற புதுவருட கொண்டாட்டத்தின்போது கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பலத்த காயமடைந்த 17 வயதுடைய யுவதி கிகிச்சை பெற்று வந்த நிலையில் 14 நாள்களுக்கு பின் உயிரிழந்துள்ளார் என மின்னேரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிரித்தலை பகுதியைச் சேர்ந்த கோசலா சாமோத்ய பண்டார என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுபின்னர்அநுராதபுரம்வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்குசத்திரசிகிச்சைமேற்கொள்ளப்பட்டு மீண்டும்பொலன்னறுவைபொதுவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார்.(05)

# சித்திரைப் புத்தாண்டு கயிறு இழுத்தல் மண்டானையில் களைகட்டியது





(வி.ரி. சகாதேவராஜா)

விநாயகபுரம் சமுர்த்தி வங்கியின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வானது ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் -4 மண்டானை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சசிகுமார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.அரசரெத்தினம், முகாமைத்துவ பணிப்பாளர் பி.கமலேஷ்வரன், தம்பிலுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாரம்பரிய கலாசார விளையாட்டுகளுடன் கயிறிழுத்தல் போட்டி அனைவரையும் பரவசப்படுத்தியது.

மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,வலய வங்கி உதவிமுகாமையாளர்கள், வங்கிவலயகள உத்தியோகத்தர்கள், திட்ட உதவியாளர், சமுர்த்தி தலைமைக் காரியாலய ச.அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பிரதேசமட்ட,வங்கிக.பா.சபைத்தலைவர்கள், வர்த்தக.ச.தலைவர் உறுப்பினர்கள், சமுர்த்தி உற்பத்தியாளர்கள், சவங்கிவாடிக்கையாளர்கள்பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# யானைக்கு கண் வைத்து விட்டார் ஆஷு மாரசிங்க

## பிரசன்ன ரணதுங்க முன்னிலையில்



மினுவாங்கொடை அலிஸ்பார்க் மைதானத்தில்நேற்று (27) நடைபெற்ற மினுபுர புதுவருட கொண்டாட்டத்தில் யானைக்குகண்வைத்தல்போட்டியில் ஜனாதிபதியின்நாடாளுமன்றவிவகாரங்களுக்கான ஆலோசகர் ஆஷு மாரசிங்கவும் கலந்துகொண்டார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உட்பட திரண்டிருந்த மக்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் ஆஷு மாரசிங்க யானைக்கு கண்ணை வைக்க முற்பட்டதுடன் குறித்த இடத்திற்கு மிக அருகில் கண்ணை அடையாளப்படுத்த முடிந்தது.

மினுவாங்கொடை பிரதேச செயலகம், மினுவாங்கொடை பிரதேச சபை, மினுவாங்கொடை நகர சபை, பொலிஸ் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து இந்த புது வருட கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலுக்கமைய இந்த புத்தாண்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் பிரசன்ன, யானையை பார்வையிட்ட பின்னர் ஆஷுக்கு 'நல்ல முயற்சி' என்று வாழ்த்தினார்.(05)

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கு நேர்முகத் தேர்வு

அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களைநிரப்புவதற்காககடந்தமார்ச்மாதம்2 ஆம்திகதிநடைபெற்றபரீட்சையின்பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டர்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு தொடர்பில் கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வுகள் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி முதல் மே மாதம் 9 ஆம் திகதி வரை இசுருபாய கல்வி அமைச்சில் நடைபெறும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்குதகுதியானவர்களின்பெயர்பட்டியல் மற்றும்அழைப்புக்கடிதம்என்பனகல்விஅமைச்சின் இணையத்தளத்தில்வெளியிடப்பட்டுள்ளனஎனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# புத்தாண்டு பாரம்பரிய விளையாட்டு விழா




(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடாத்திய சித்திரைப் புத்தாண்டு விழா முள்ளிப்பொத்தானை சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் சனிக்கிழமை இடம் பெற்றது.





இதில் தலையனைச் சமர், யானைக்கு கண் வைத்தல், மட்டை இழைத்தல், பணிஸ் சாப்பிடுதல் ,பலூன் உடைத்தல்,கயிறு இழுத்தல் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றன.

மேற்படி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்துகொண்டு போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் இதன் போது வழங்கி வைத்தார்.



மேலும் இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவி பணிப்பாளர் நா.குகேந்திரா ,பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி ஜாபிர்,விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.(05)

# சித்திரை விளையாட்டு விழாவில் மெதுவான மிதிவண்டி ஓட்டம்!



( வி.ரி. சகாதேவராஜா)

இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலகம் நடத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து சிறப்பித்தார்.

காலையில் மரதன் ஓட்டமும் கோலம் போடுதல் பன்னாங்கு பின்னுதல் குருத்தோலை பின்னுதல் போன்ற நிகழ்வுகள் நடந்தன.

மாலையில் பிரதான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன .



பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளுடன் சிறுவர்களுக்கான மெதுவான மிதிவண்டி ஓட்டம் இடம் பெற்றது. அது அனைவரையும் ஈர்த்தது. (05)

# உடலில் கிருமித் தொற்று ஏற்பட்டு இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்

உடலில் கிருமித் தொற்று ஏற்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமைஉயிரிழந்துள்ளார்.

தொற்று காரணமாக உயிரிழந்தவர்பருத்தித்துறையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை (வயது 34) ஆவார்.

உடலில்கட்டிஇருப்பதாககடந்த புதன்கிழமைபருத்தித்துறைஆதார வைத்தியசாலையில்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் சனிக்கிழமைபருத்தித்துறைமரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

அதனையடுத்து, உடற்கூற்று பரிசோதனையை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா மேற்கொண்டார்.

இதன்போது வெளியான அறிக்கையில் அந்த நபர் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# வாகன விபத்தில் ஒருவர் இறப்பு

புத்தளம் - அநுராதபுரம் ஏ-12 வீதியில் பண்டுலகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் பலத்த காயமடைந்தார் என அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் பண்டுலகம பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த லால் என்ற43வயதுடையநபரொருவரே உயிரிழந்துள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார்பஸ்மற்றும்மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்டபோதே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (05)

# பல கோடி ரூபாய் நகைகள் கிளிநொச்சி பகுதியில் மீட்பு



கிளிநொச்சி பகுதியில் சனழக்கிழமைஇரவு11மணியளவில் சிறிய கார் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட நான்கு கிலோ 170 கிறாம் தங்க கட்டி மீட்கப்பட்டதுடன் காரில் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்இருந்துஏ-09 வீதி வழியாக வவுனியாவுக்கு குறித்த காரொன்றில் மேற்படி எடையுடையதங்கம்கடத்தப்படுவது தொடர்பாக இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த விசேட தகவல்களின் அடிப்படையில் உடனடியாக விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்ட தையடுத்து கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் வைத்து வாகனத்தை சோதனையிட்ட விசேட அதிரடிப்படையினர் குறித்த தங்கத்தை மீட்டதுடன் சந்தேகத்தின் பெயரில் காரில் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட மூவரைக் கைது செய்துள்ளனர். இவ்வாறுகைதுசெய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்குறித்தநபர்களைநீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (05 - 316)



# போதைப்பொருள்களுடன் 686 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருட்களுடன் 9 பெண்கள் உட்பட 686 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 18 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ள 6 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 138 கிராம் ஹெரோயின், 163 கிராம் ஐஸ் , 176 கிராம் கஞ்சா , 27 கிராம் ஹெரோயின்மற்றும்68கிராம்கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2024இல் வெளியிடப்பெற்றது